பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 23 புதன்கிழமை 08.01.2020 கதிர் 64

**இது ரகசியம் அல்ல!**

டாக்டர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான வழக்கு விடயத்தில் நமது பொலிசாரும் வழக்குத் தொடுநர் தரப்பும் நடந்து கொண்ட முறைமை குறித்து இப்பத்தியில் விவரிப்பேன் என்று நேற்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அரசியல் பக்கம் 02

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இருக்கும் நிலையில் தொடருங்கள்

## ஜனாதிபதி கோட்டாவிடம் சுமந்திரன் நேற்று நாடாளுமன்றதில் கோரிக்கை



கொழும்பு. ஜனவரி.08

கடந்த அரசின் காலத்தில் இந்த நாடாளுமன்றமே ஏகமனதான தீர்மானம் மூலம் அரசமைப்புப் பேரவையாக மாறி, புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அது கணிசமான அளவு முன்னேறியுள்ளது. அந்தப் பணியை அப்படியே முன்னெடுத்து, இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்புடையதான புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

– இப்படி புதிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை நேற்று நாடாளுமன்ற உரை மூலம் கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 13

## நான் சதிகாரனல்லன்!

### சபையில் கூறினார் ரணில்



கொழும்பு, ஜன. 08

தன்னைக் கொலை செய்ய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சதித் திட்டத்தில் ஈடுபட்டார் என இரா பக்கம் 03

## கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுவன் பரிதாப மரணம்



யாழ்ப்பாணம், ஜன. 08

பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் பக்கம் 03

## சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர இடைநிறுத்தம்!



கொழும்பு, ஜன. 08

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு அவர் சேவையில் பக்கம் 03

## சஜித்தின் வாய்தான் தோல்விக்குக் காரணம்

### கூறுகிறார் மஹிந்தானந்த



கொழும்பு, ஜன. 08

சஜித் பிரேமதாஸவின் அளவுக்கதிகமான பேச்சுத்தான் அவரது தோல்விக்குக் காரணம். அவர் நாடாளு பக்கம் 03

## காணாமற்போனோர் பணியகமும் மிகவிரைவில் காணாமற்போகும்?

கொழும்பு, ஜன. 08

முன்னைய அரசால் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் பணியகச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கு தற்போதைய அரசு தீர்மானித்துள்ளது.

காணாமற்போனோர் பணியகச் சட்டம் பக்கம் 03

## சு.க. கூட்டத்துக்குள் நுழைந்த சந்திரிகா!



கொழும்பு, ஜன. 08

சுதந்திரக் கட்சியின் தலைமையத்தில் நேற்று இடம்பெறவிருந்த கட்சி அமைப்பாளர்களுடனான கலந் பக்கம் 03

## மறவன்புலவு காற்றாலை மின் நிலையத்தை அமைக்கக் கொள்கையளவில் இணக்கம்

### அங்கஜன் எம்.பி. தலைமையில் நேற்று ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜன. 08

மறவன்புலவு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதால் அதனைச் சூழவுள்ள குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் விளைவுகள் தொடர்பில் ஆராய்ந்து காற்றாலைகளில் முன்னெடுக்கப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பிலும் அந்தப் பகுதி மக்களுக்கு வாழ் பக்கம் 03

## மிலேனியம் உடன்பாட்டை கிழித்தெறிய நாங்கள் தயார்

### சவால் விடுகின்றார் சஜித்



கொழும்பு, ஜன. 08

நாட்டுக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்த மிலேனியம் சவால் ஒப்பந்தத்தை ஏப்ரல் 4 ஆம் திகதி கிழித்தெறிய பக்கம் 03

## பிரான்ஸிலிருந்து யாழ். வந்த முதியவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 08

பல வருடங்களின் பின்னர் தனது ஊருக்கு வரவேண்டும் என்ற ஆவலுடன் தனது வீட்டைப் பார்க்க பக்கம் 03

# ராஜீவ் காந்தி கொலை வழக்குக் கைதிகளை விடுவிப்பது சர்வதேச அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமாம்

## இந்திய மத்திய அரசு நீதிமன்றத்தில் தெரிவிப்பு



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்தால் அது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடுவதோடு, சர்வதேச அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள நளினி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் 2018-ஆம் ஆண்டு ஏழு பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியும் ஆளுநர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அமைச்சரவை பரிந்துரைத்த அடுத்த நாளே தன்னை விடுவிக்காமல் சட்டவிரோதமாக அடைத்து வைத்துள்ளனர் எனவும் எனவே தன்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்ய உத்தரவிடவும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க அனுமதி கேட்டு கடந்த 2016-ஆம் ஆண்டு தமிழக அரசு அனுப்பிய மனுவை கடந்த 2018-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசு நிராகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதமர் பதவி வகித்தவர் உட்பட 15 பேர் கொல்லப்பட்ட வழக்கில் இவர்களை விடுவித்தால் அது சர்வதேச அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் தவறான முன்னுதாரணமாகிவிடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது போன்று கொடூர குற்றத்திற்காக தண்டனை பெற்றவர்களை விடுவித்தால் அது மற்ற கைதிகளுக்கு சாதகமாகி விடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து மத்திய அரசையும் எதிர் மனுதாரராக சேர்க்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை வரும் 28-ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை இலங் கைப் பொலிஸார் எப்படிப் படுமோ சமாகக் கையாள்கின்றார்கள் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆறு நாள்களுக்கு முன்னர் – நவம்பர் 10ஆம் திகதி – அப்போதைய அமைச்சரான டாக்டர் ராஜித சேனாரத்ன கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துகின்றார். அதில் தோன்றிய இருவர், ராஜபக்ஷக்களின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளைவான் கடத்தல்களில் தாங்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தனர் எனப் பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலமளித்தனர். கடத்தப்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களது உடல்கள் முதலைகளுக்கு இரையாக்கப்பட்டன என்றெல்லாம் கூறப்பட்டது.

ஒரு வாரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் இந்த ஒப்புதல் வாக்குமூலமளித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற பிணையில் வெளிவரமுடியாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, அதனடிப்படையில் 'பி' அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் பிரகாரம் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களைப் பத்திரிகையாளர் மாநாட்டுக்குத் கூட்டி வந்தவர் என்ற முறையில் ராஜித சேனாரத்ன எம்.பி. இலக்கு வைக்கப்பட்டார்.

ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக இருந்தபோது அவரால் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் தலைவராக நியமிக்கப்பட்டவர் டாக்டர் ரூமி.

மேற்படி இரு நபர்களுக்கும் இருபது லட்சம் ரூபா பணம் வெகுமதியாக வழங்கி அவர்களை அப்படி அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுவதற்கு ஏற்பாடு செய்தவர் டாக்டர் ரூமி என்பது பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. அதற்காக அவரைக் கைது செய்தது பொலிஸ்.

இதில் வேடிக்கை என்னவென்றால் முதல் இரு நபர்களுக்கும் அவர்களின் கைது தொடர்பான 'பி' அறிக்கையில் என்னென்ன குற்றச்சாட்டுக்களை அரசுத் தரப்பு – அதாவது பொலிஸ் தரப்பு – முன்வைத்ததோ அவை எல்லாம் டாக்டர் ராஜித மற்றும் டாக்டர் ரூமிக்கு எதிராகவும் அப்படியே முன்வைக்கப்பட்டன.

கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் குற்றச்சாட்டுக்களை எல்லாம் டாக்டர் ராஜித, டாக்டர் ரூமி போன்றோருக்கு 'பி' அறிக்கையில் முன்வைக்கப்படுவதை நிராகரித்த நீதிவான், அந்தத இருவர் தொடர்பிலும் 'பி' அறிக்கையைத் திருத்தி எடுத்து வாருங்கள் என்று தெரிவித்து வழக்கை சில மணித்தியாலங்கள் ஒத்திவைத்தார்.

அவர்களுக்கு எதிரான 'பி' அறிக்கைகள் திருத்தப்பட்டன.

அதேசமயம், இந்த இருவர் தவிர்ந்த மற்றைய இருவர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஒரு முக்கிய விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

எங்கள் கட்சிக்கார்கள் இருவர் மீதும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் குற்றச்சாட்டுக் கள் இந்த 'பி' அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் யாரைக் கொலை செய்தார்கள் என்றோ, யாரைக் கடத்தினார்கள் என்றோ, யாரிடம் கௌ்ளையடித்தார்கள் என்றோ எந்த விவரமும் 'பி' அறிக்கையில் இல்லை.

கொல்லப்பட்ட ஏதேனும் நபரின் பெயர் விவரமோ, சடலமோ, ஆதாரமோ எதுவும் இல்லாமல் ஒருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்படுவது அல்லது கொலையோடு சம்பந்தப்படுவது இலங்கையின் சட்டச் சரித்திரத்தில் இதுதான் முதல் தடவை போலும்.

கொலைச் சம்பவமோ நடக்காமல் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது– என்று அவர்கள் தெரிவித்தமையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது

அந்த இருவருக்கும் எதிரான கொலை, கொள்ளைக் குற்றச்சாட்டுக்களைக் கூட விலக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதன் பின்னர் இந்த நபரையும் உடன் பிணையில் விடுவிக்குமாறு அவர்களின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் விண்ணப்பித்தனர்.

அது தொடர்பான விவாதம் வந்தபோது பிணை அனுமதியை அரசுத் தரப்பு கடுமையாக ஆட்சேபித்தது. அந்த ஆட்சேபனையை நீதிவான் நிராகரித்தார்.

இந்த வழக்கில எதிரிகள் மீதான – பிணையில் செல்ல அனுமதிக்க முடியாத – குற்றச்சாட்டுக்கள் எல்லாம் விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டன. இப்போது எஞ்சியிருக்கும் குற்றச்சாட்டுக்கள் சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிப்பதைக் கட்டுப்படுத்தக் கூடியவையே அல்ல.

இந்தச் சந்தேகநபர்கள் சாட்சிகளைக் குழப்புவர்கள் என்றோ, அலலது விசாரணைக்கு முகம் கொடுக்காமல் தலைமறைவாகி விடுவார்கள் என்றோ தோன்றினால் மட்டுமே இப்போது இவர்களைப் பிணையில் செல்லாமல் தடுக்கமுடியும். ஆனால் அப்படியான சந்தேகம் கொள்வதற்கான ஏது நிலை ஏதும் இல்லாதமையால் அவர்களைப் பிணையில் விடுவிக்கிறேன்.– என்று நீதிவான் தெரிவித்தார்.

முதலில் பிணையிலேயே வெளியே வர முடியாத குற்றச்சாட்டுக்கள் அபாண்டமாகச் சுமத்தப்பட்டன. பின்னர் பிணையில் விடுவிப்பதற்கு சரியான காரணமின்றி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இப்படி இந்த வழக்கில் எல்லா விடயங்களிலுமே பொலிஸ் –அரசு – தரப்பு சட்டரீதியாக மூக்குடைபட்டு நிற்கின்றது என்பதுதான் உண்மை.

இதுவும் 'சிரிப்பு பொலிஸ்' விளையாட்டுத்தான் பாருங்கோ...!

– மின்னல் –

# ஆசிய நாடுகளில் பரவும் நிமோனியா

கொழும்பு, ஜன. 08

ஆசியா நாடுகளில் பரவி வரும் நிமோனியா வைரஸ் இலங்கையைத் தாக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு முன் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

அதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி சுகாதார அமைச்சு காண் காணிப்புடன் செயற்பட்டுவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தாக்கம் அதிகரிக்குமாயின் நிலைமையை கட்டுபாட்டுக்குள் கொண்டுவர விமான நிலையத்திலும் வைத்தியசாலைகளிலும் ஓர் அவசர திட்டத்தை செயல்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தயாராகி உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் சீனாவிலிருந்து வரும் பயணிகளுக்குத் தடை விதிக்கப்படலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் நிமோனியா வைரஸ் தாக்கம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு மற்றும் ஆசிய நாடுகள் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றன.

சீனாவின் வுஹான் மாகாணத்தில் நிமோனியா வைரஸ் தாக்கம் ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பு, சீனா சுகாதார அமைச்சை எச்சரித்துள்ளது.

அத்துடன் வைரஸ் தாக்கத்துக்கான சரியான காரணத்தை சீன அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இதுவரை வுஹான் மாகாணத்தில் நிமோனியா தாக்கத்துக்கு உள்ளானதாகச் சந்தேகிக்கப்படும் 44 பேர் வரை கண்டறியப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு ஏனைய நாடுகளை எச்சரித்துள்ளது. அதில் 11 பேர் கடுமையான நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.

வுஹான் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிமோனியா வைரஸ் தாக்கமானது ஆசியா முழுவதும் விழிப்பூட்டல்களை ஏற்படுத்தியுள்ளது.

முக்கியமாக ஹாங்கொங், சிங்கப்பூர், பாங்கொக், மலேசியா, மக்கா, தாய்வான், தென் கொரியா ஆகிய நாடுகள் விமான நிலையங்கள், நாட்டின் எல்லைகள் மற்றும் பொது இடங்களில் கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இந்த நோய்க்கிருமி மற்றும் நோய்த்தொற்றுக்கான காரணம் பற்றி இன்னமும் ஆராயப்பட்டு வரும் நிலையில், இன்ப்ளூயன்ஸா வைரஸ்கள், பறவைக் காய்ச்சல் வைரஸ்கள், அடினோ வைரஸ், கடுமையான சுவாச நோய்க்குறி (சார்ஸ்) மற்றும் மத்திய கிழக்கு சுவாச நோய்க்குறி உள்ளிட்ட சுவாச நோய்க்கி ருமிகளை ஏற்படுபடுத்தும் நோய்க்கிருமி நிராகரிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இதுவரை வந்த அறிக்கைகள் நிமோனியா ஓர் அரிய வைரஸ் அல்லது முன்னர் அறியப்படாத ஒரு நோய்க்கிருமியால் ஏற்படக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ் வைரஸ் தொற்று ஏற்பட்டு ஒரு வாரத்தின் பின்பே நோய்தொற்று அறிகுறிகள் வெளிப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்ஸ் மற்றும் பறவைக் காய்ச்சல் தாக்கம் காரணமாக முந்தைய காலங்களில் 32 நாடுகளில் பல ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டும் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ஐ)

# பலியான விமானியின் கைப் பகுதி இரண்டு நாள்களின் பின்னர் மீட்பு

அப்புத்தளை, ஜன.08

அப்புத்தளையில் விபத்திற்குள்ளான விமானப்படையின் வை-12 விமானத்தின் விமானியின் கைப்பாகம் இரு தினங்களுக்குப்பின் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டு அப்புத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அப்புத்தளையில் கடந்த 03 ஆம் திகதி விபத்திற்குள்ளான சிறிய ரக விமானத்தின் சிதறிக் கிடக்கும் பாகங்கள் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் விமானியின் கைப்பாகமெனக் கருதப்படும் சிதைந்த மனித கைப்பாகம் மீட்புப்பணியில் ஈடுபட்டிருப்பவர்களால் மீட்கப்பட்டது.

இதையடுத்து மீட்கப்பட்ட அந்தக் கைப்பாகம் அப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டது. அது, பொலிஸாரினால் அப்புத்தளை அரசினர் வைத்தியசாலை ஆய்வுக் கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.


# மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் தொடர்பான தடயவியல் கணக்காய்வு அறிக்கை வெளியேவராது

## சட்டமா அதிபரின் முடிவை நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, ஜன.08

திறைசேரி பிணைமுறிகள் ஊழல் தொடர்பாக விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய மேற்கொள்ளப்பட்ட சட்டம் சார்ந்த தடயவியல் கணக்காய்வு அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது பொருத்தமற்றதென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.



திறைசேரி பிணை முறிகள் ஊழல் விவகாரம் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக எதிர்காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றமையால் அந்த ஆவணங்களைப் பகிரங்கப்படுத்த முடியாது என சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தத் தடயவியல் ஆய்வு அறிக்கைகள் வெளியே வந்தால் பிணை முறி ஊழல் முன்னைய அரசுகளின் காலத்திலும் தாராளமாக இடம்பெற்றன என்பது அம்பலமாகும் எனக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மறவன்புலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாதாரங்களை வழங்குவது தொடர்பிலும் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தென்மராட்சி, மறவன்புலவுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன், இலங்கை மின்சார சபை முகாமையாளர், காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கும் நிறுவனம், யாழ். பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, யாழ். பல்கலைக்கழகப் பொறியியல்துறைப் பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஜீவசுதன், பௌதீகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஏ.தேவகரன், விலங்கியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கே.கஜபதி, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர், தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் பிரதேச மக்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாக காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டமையுடன் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடினர்.

காணிக் கொள்வனவு, காற்றாலை அமைவிடம், காற்றாலை ஒலி, காற்றாலை பராமரிப்பு மற்றும் விபத்துக்கள், காற்றாலையினால் ஏற்படும் பிற விளைவுகளுக்கு பொறுப்பு கூறல், சூழலியல் மாற்றம், சமூக நிதிப் பயன்பாடு, வீதிகள் சேதமடைதலும் மீளச் சீரமைத்தலும் மற்றும் திணைக்கள அனுமதிகள், இவ்வாறான பல விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டிருந்தன.

மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக அமைக்கப்படவுள்ள காற்றாலைக் கோபுரத்தைச் சற்றுத்தூரத்துக்கு அப்பால் கொண்டு செல்ல மின் உற்பத்தி நிறுவனம் கொள்கையளவில் இணக்கம் கண்டது.

மேலும் குடியிருப்புகளுக்கு மேலாகக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்ட அதிக வலுக்கொண்ட மின்சாரக்கேபிள்களை குடியிருப்பு அல்லாத பகுதியின் ஊடாக மாற்றுவதற்கு இலங்கை மின்சார சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், முக்கியமாக மறவன்புலவு காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்கு அண்மையாகக் குடியிருக்கும் சுமார் 200 குடும்பங்களுக்கும் சமமான அவர்களால் முன்வைக்கப்படும் வாழ்வாதாரத் திட்டங்களை மின் உற்பத்தி நிறுவனம் செய்து கொடுக்க வேண்டும் என்ற முன்மொழிவை அந்த நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

இந்த விடயத்துக்காக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல் சாராத மூவரைக் கொண்ட குழுவை அமைப்பது என்றும் மின் உற்பத்தி நிறுவனத்தால் யோசனை முன்வைக்கப்பட்டது.

மறவன்புலவு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக அந்தப் பகுதியில் அழிக்கப்பட்ட மேய்ச்சல் தரைகளை மீள அமைப்பதற்கும் வீதிகளைச் சீரமைப்பதற்கும் மின் உற்பத்தி நிறுவனத்தால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மறவன்புலவு குடியிருப்பாளர்களுக்கு பாதிப்புகள் இல்லாத வரைக்கும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றுவதாக மின் உற்பத்தி நிலையத்தினர் உறுதி தந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (ஐ-07)

## பிரான்ஸிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வந்த முதியவர் நாரி வலி காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியைச் சேர்ந்த கந்தையா பாலஈஸ்வரன் (வயது-70) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

கடந்த டிசெம்பர் மாதம் பிரான்ஸ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டைப் பார்ப்பதற்கு ஆவலாக வந்த நிலையில் வீட்டு விளைவைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது கடந்த 2ஆம் திகதி இவருக்கு நாரி வலி ஏற்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணையினை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அலுவலர் நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மீசாலை மேற்குப் பகுதியில் கிணற்றில் உயிரிழந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்கப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வேலுப்பிள்ளை சதாசிவம் (வயது 84) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வீட்டில் உள்ள அனைவரும் பணிக்கு சென்றிருந்த நிலையில் முதியவர் தனிமையில் வீட்டில் இருந்துள்ளார். நேற்று முன் தினம் மதியம் மகள் பணிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் தந்தையார் கிணற்றிலிருந்து சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அலுவலர் என்.இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

நேற்றுச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனை பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-07)

## சி.ஐ.டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உதவியாளராக இவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அவர் இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றத்திலும் அதிகமாகப் பேச வேண்டும். அப்படியென்றால் தான் நாம் நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறலாம் எனத் தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரு நாட்கள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவரின் கன்னியுரை இன்று(நேற்று) சபையில் இடம்பெற்றுள்ளது. ஆனால் உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவா என்ற கேள்வி எழுகின்றது.

ஐக்கியதேசியக்கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருவர் உள்ளனர். முதலில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதைத் தீர்மானித்து அதன் பின்னர் உரையாற்ற வர வேண்டும்.

சஜித் பிரேமதாஸவின் அதிகளவிலான பேச்சே ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. எனவே இன்னும் அதிகமாக நீங்கள் பேசுங்கள், அப்போது தான் எமக்கு வாக்கு அதிகரிக்கும்.

இன்று எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு இடையில் எதிர்க்கட்சித்தலைவர் மோதல் வந்துள்ளது. சுமந்திரன் எதிர்க்கட்சித் தலைவரா? அனுரகுமார எதிர்க்கட்சித் தலைவரா? ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவரா? அல்லது சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவரா என்பது குறித்து முதலில் உங்களிடம் ஒரு கலந்துரையாடலை நடத்தி ஒருவரை நியமியுங்கள்.

இன்று எம்.சி.சி குறித்து, சிங்கப்பூர் உடன்படிக்கை குறித்து, விலை உயர்வு குறித்து எல்லாம் பேசும் எதிர்க்கட்சித் தலைவர் அன்று ஆட்சியில் இருக்கும்போது ஏன் வாய் திறக்கவில்லை? சிங்கப்பூர் உடன்படிக்கை, எம்.சி.சி உடன்படிக்கை அமைச்சரவைக்குக் கொண்டுவந்த நேரம் நீங்கள் அமைச்சரவையில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என அப்போதைய ஜனாதிபதி கூறினார்.

இராணுவத் தண்டிப்பு குறித்து நடவடிக்கை எடுத்தபோது ஏன் வாய் திறக்கவில்லை? அப்போதெல்லாம் வாய் திறக்காது இன்று நீங்கள் நியாயம் பேச வந்துள்ளீர்கள். உங்களின் ஆட்சிக்காலத்தில் செய்த எதனையும் நாம் செய்யமாட்டோம். கடந்த ஆட்சியில் நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுத்தது, அதிகாரிகளை மிரட்டி அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபட்ட குரல் பதிவுகளில் 5 குரல் பதிவுகள் மட்டுமே வெளியில் வந்துள்ளன. இன்னும் 1 இலட்சத்து 21ஆயிரம் குரல்பதிவுகள் என்னிடம் உள்ளன.

அதனை வெளியிட்டால் நல்லாட்சி அரசின் சகல குற்றங்களும் வெளியில் வரும். எமது ஆட்சியாளர்களை விமர்சித்து நீதிமன்ற அவமதிப்பு, சட்ட மீறல்கள் முன்னெடுத்ததாக மக்கள் மத்தியில் கூறியவர்களின் உண்மை முகம் இப்போது வெளியில் வந்துள்ளது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயகவும் சேர்ந்து செய்த சதிகள் வெளியில் வந்துள்ளன. இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் பாலித ரங்கே பண்டார, குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இருந்த குரல் பதிவுகள் எவ்வாறு உங்களில் கைகளுக்கு வந்தது? நீங்கள் இவற்றை எவ்வாறு எடுத்தீர்கள்?. அப்படியென்றால் இது சட்டத்தை கையில் எடுத்த செயற்பாடு இல்லையா? – எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு மஹிந்தானந்த பதிலளிக்க முடியாமல், எதுவும் பேசாமல் உரையை முடித்துக் கொண்டு உட்கார்ந்தார். (ஐ)

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாவற்குழியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

தரம் 2 இல் கல்வி கற்கும் சசிதரன் எட்வேட் சாமுவேல் (வயது 7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

நேற்று முன் தினம் மாலை விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் அருகில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளான். பின்னர் சிறுவன் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளான்.

சிறுவனை மீட்ட உறவினர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும் சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தான் எனப் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இறப்பு விசாரணை நேற்று இடம்பெற்றது. வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனை பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-07)

## சு.க. கூட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துரையாடலில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அது இரத்துச் செய்யப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவிருந்தது. அப்போது அதற்கு அழைப்பு விடுக்கப்படாத முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அங்கு வந்தமையால் அமைதியின்மை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்திரிகாவின் வருகையால் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து, மைத்திரிபால அங்கு வரவில்லை.

சந்திரிகாவின் வருகைக்கு எதிர்ப்பு வெளியிட்டு அமைப்பாளர்கள் அங்கிருந்து சென்றனர் என்றும், இறுதியில் சந்திரிகாவும் அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மிலேனியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு தயார் என்றால் நாங்கள் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் பூரண ஆதரவளிப்போம். ஆனால் நாட்டில் இனவாதம், மதவாதத்தை அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொண்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் விரிவாக்குவதன் மூலமே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

அதனால் அரசு தெரிவிக்கும் மக்கள் மயமான வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுக்குப் பூரண ஆதரவை வழங்க எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது. அரசு மக்களுக்கு அளித்த வேலைத் திட்டங்களை மேற்கொள்ள பொதுத் தேர்தல் வரை பார்த்துக் கொண்டிருக்கமாமல் விரைவாக வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும் – என்றார். (ஐ)

# வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நாளை இந்தியாவுக்கு



வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நாளை வியாழக்கிழமை இந்தியா பயணமாகவுள்ளார். இந்த பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் பொதுவான பல்வேறு விடயங்கள் குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார். வெளிவிகார அமைச்சராக பதவியேற்ற பின் முதலாவது வெளிநாட்டு பயணம் இதுவாகும்.

## நான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ரணில் நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டார். இதன் போதே, மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார்.

நான் சதித்திட்டங்களில் ஈடுபடும் ஒருவன் அல்லன் என்று ரணில் குறிப்பிட்டார்.

தற்போது சமூக ஊடகங்களில் பரவி வரும் தொலைபேசி உரையாடல்கள் ரஞ்சன் ராமநாயக்கவின் மாதிவெல உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சி.டிகளிலிருந்து வந்ததாகத் தெரிகிறது, இந்தப் பதிவுகள் இப்போது சமூக ஊடகங்களிலும் பிரதான ஊடகங்களிலும் பரப்பப்படுகின்றன. அவை ஊடகங்களிலும், எம்.பிக்களின் கைகளிலும் எப்படி சென்றடைந்தன என்பது பெரிய கேள்விக்குறி என ரணில் தெரிவித்தார்.

அத்துடன், பரப்பப்படும் ஒலிப் பதிவுகளை பொலிஸாரிடமிருந்து பெற்று சபாநாயகர் ஆராய வேண்டும். எந்த எம்.பியாவது சட்டத்தை மீறியிருந்தால் இந்தச் சபைக்கு தெரியப்படுத்துங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## காணாமற்போ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து ஆரம்ப கட்ட பேச்சுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ள நீதியமைச்சின் அதிகாரியொருவர் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அரசு மீளாய்வு செய்து உரிய நடவடிக்கையை எடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட சட்டத்தை அரசு தொடருமா எனத் தற்போதைக்கு தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள அந்த அதிகாரி உரிய முறையில் மீளாய்வை மேற்கொண்ட பின்னர் அது குறித்து தீர்மானிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகச் சட்டம் முன்னைய அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் காணாமற்போனோர் பணியகத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது. எனினும் அச்சமயம் எதிர்க்கட்சியில் இருந்த தற்போதைய அரசில் இடம்பெற்றிருந்தவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்திருந்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ரணிலின் மீதான வசவுகள்

'உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும்; உன் நிலைமை கொஞ்சம்இறங்கி வந்தால் நிழலும் கூட மிதிக்கும்..'என்றான் கவிஞன் கண்ணதாசன்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பெரும் அரசியல் சூறாவளிகள், பூகம்பங்களுக்கு மத்தியில் கடந்த கால் நூற்றாண்டு காலமாகக் கட்டிக் காத்த ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய நிலையைப் பார்க்கும் போது கவிஞனின் இந்த அடிதான் நினைவுக்கு வருகின்றது.

கடைசியாக அவருடன் இதுவரை பக்கத்தில் நின்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கூட 'ஸேம் சைட்' கோல் அடி வாங்கும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு அவர் வந்து விட்டார்.

2010 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், மஹிந்தராஜபக்ஷ ஆட்சிப் பீடத்துடன் முரண்பட்டு நின்ற – அப்போதுதான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு, முப்படைகளின் பிரதானி என்ற பொம்மைப் பதவிக்கு மாற்றப்பட்டு, கையாலாகாத நிலையில் மனமுடைந்திருந்த – சரத் பொன்சேகாவுக்கு தேசிய அரசியலில் வாழ்வு கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடும் வாய்ப்பை சரத் பொன்சேகாவுக்காகத் தானம் செய்து, அவருக்காகக் கடுமையான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர் ரணில்.

அந்தத் தேர்தலில் தோல்வியுற்ற சரத் பொன்சேகா தனிக் கட்சி தொடங்கி, எம்.பியாகி, ராஜபக்ஷ அரசினால் சிறைக்குள் தள்ளப்பட்டு, எம்.பி.பதவியை இழந்து, தனித்து நின்றார்.

அடுத்த பொதுத் தேர்தலில் அவரால் வெல்லக் கூட முடியவில்லை. அத்தகையவருக்கு தனது ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவியையும் வழங்கி அமைச்சர் பதவியும் பெற்றுக் கொடுத்தார் ரணில்.

சிறைத் தண்டனையால் அவர் இழந்த இராணுவப் பட்டங்கள், சிறப்புரிமைகள் போன்றவற்றை அவருக்கு மீளப் பெற்றுக் கொடுத்தமை மட்டுமல்லாமல், ஐந்து நட்சத்திர பீல்ட் மார்ஷல் இராணுவப் பட்டமும் அவருக்குக் கிடைக்கப் பிரதான காரணியாகவிருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

இதுவரை காலமும் அதற்கு நன்றியாக ரணில் பக்கம்தான் நின்றார் சரத் பொன்சேகா.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் கூட சரத் பொன்சேகாவை வெட்டி ஓடவே ஐ.தே.கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஆரம்பத்தில் முயன்றார்.

அதனை அறிந்து சரத் பொன்சேகாவைத் தம் பக்கம் மீண்டும் இழுக்கும் முயற்சிகளை பஸில் ராஜபக்ஷ தரப்பு ஆரம்பித்தது. அந்த முயற்சி முனைப்புப் பெற்றிருந்ததாகவும் கூடத் தகவல் வெளியானது.

அதுபற்றி அறிந்தும், தேர்தல் பிரசாரத்தில் சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும், ஜனாதிபதியாக வெற்றியீட்டினால் பாதுகாப்புப் பொறுப்பை அவரிடம் ஒப்படைப்பேன் என அறிவிக்குமாறும் –

சஜித் பிரேமதாஸவுக்கு அழுத்தம் கொடுத்தவரே ரணில் தான். அதற்குப் பின்னர்தான் சரத் பொன்சேகாவைத் தன் பக்கம் அரவணைத்துக் கொண்டார் சஜித். இதன் மூலம் கட்சிக்குள் சரத் பொன்சேகாவுக்கு முக்கிய இடமும் கிடைத்தது.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் இழந்து கட்சிக்குள் வேண்டப்படாதவராய் – தீண்டத்தகாதவராய் – ரணில் விக்கியமசிங்க இருக்கும்போது தன் பங்குக்கும் ஒரு நொட்டு, நொட்ட முயற்சிக்கிறார் சரத் பொன்சேகா.

இனிமேல் கட்சிக்குள் ரணில் அதிகாரம் செலுத்துவது அல்லது கை ஓங்குவது சாத்தியமில்லை என்று தெளிவாகி வருகின்றது. கட்சியின் தலைமைப் பதவியும் எந்நேரமும் அவர் கைகளில் இருந்து பறி போகும் என்பதுதான் நிலைமை.

அதனால், கட்சியின் அனைத்துத் தோல்விகளுக்கும் காரணம் ரணில்தான் என்று பழியை அவர் மீது போட்டிருக்கின்றார் சரத் பொன்சேகா.

ரணிலின் தவறுகளால் அதிகம் பாதிக்கபட்டவர் தங்களின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என்று குற்றச்சாட்டை அடுக்கியதன் மூலம் அடுத்துக் கட்சிக்குத் தலைமை வகிக்கப் போகும் தரப்புக்குத் தாம் நெருக்கமானவர் என்று காட்டி தமது அரசியல் எதிர்காலத்தை ஓரளவுக்கு உறுதிப்படுத்தியுள்ளார் பொன்சேகா.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேற்று வந்த சரத் பொன்சேகா, கட்சிக்குள் தன்னுடைய செல்வாக்கு நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக, கால் நூற்றாண்டுக்கு மேல் நெருக்கடிகள், பின்னடைவுகளுக்கு மத்தியில் கட்சியைக் காப்பாற்றி வழி நடத்திய தலைவர் ரணில் விக்கிமசிங்கவைத் தாக்கி, தூற்றி பகிரங்கப் பிரசாரம் செய்வதை அதுதான் அரசியல் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு – தமிழர் பிரதேசத்துக்கு – ரணில் அதிக நிதியை ஒதுக்கி, கூடிய கவனிப்பைக் காட்டியமையால்தான் பின்னடைவுத் தோல்வியை எதிர்கொண்டோம் என்ற சாரப்பட பொன்சேகா கொடுக்கும் விளக்கம்தான் எல்லை கடந்த விடயமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ரணிலின் பிடியிலிருந்து முழுதாக வெளியே வரும்போது அதுவும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் குரலாகத்தான் தன்னை மாற்றும் என்பதற்கான ஆரம்ப சமிக்ஞைதான் இந்தக் கருத்து.

# வீடு, சிறிய வியாபார நிலையங்களின் நிர்மாணத்துக்கு ஒரே நாளில் அனுமதி



கொழும்பு, ஜன. 08

வீடொன்றை அல்லது சிறிய வர்த்தக நிலையமொன்றை நிர்மாணிக்கும் திட்டங்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருப்பின் அதற்கான அனுமதியை ஒரே நாளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல், வீட்டு வசதிகள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அதிகாரிகளுடன் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் போது அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

நிர்மாணப்பணிகளுக்கான திட்டங்களுக்கு அனுமதி வழங்கும்போது நிலவும் கடுமையான சட்ட திட்டங்கள் மற்றும் நீண்டகால தாமதம் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களை இலகுபடுத்தி, மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை முடியுமான அளவு குறைப்பது அரசின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

திட்டங்களை அனுமதிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அந்த நிறுவனங்கள் துரிதமாக அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் குறித்து கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

தற்போது அனுமதியளிக்கப்படாத திட்டங்களுக்கு அனுமதியளிப்பது சம்பந்தமாக சட்டம் குறித்த அறிவுள்ள அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார். உறுதிச் சான்றிதழை ஒரே நாளில் வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய, பௌதீக திட்டத்தை இற்றைப்படுத்துவது குறித்தும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. முதன்முறையாக வீடொன்றை கொள்வனவு செய்யும் ஒருவருக்கு நீண்டகால கடன் மற்றும் நிவாரண வட்டி முறைமையின் கீழ் கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

திட்டங்களை அனுமதிக்கும்போது ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்தாது பூகோள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மாகாண மற்றும் பிரதேசங்களுக்கேற்ப முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கண்டறிந்து அவற்றுக்கான அனுமதியையும் அரச நிறுவனங்களினூடாகவே மேற்கொண்டு முதலீட்டுச் சபைக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வலுவூட்டப்படுகின்றமையுடன், தமது திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாடுமுழுவதும் சகல சிறிய நகரங்களையும் முறையாகவும் அழகிய முறையிலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக தலவாக்கலை, எல்ல மற்றும் கினிகத்ஹேன போன்ற நகரங்களை நவீனமயப்படுத்தக்கூடிய வழி வகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வேரெஸ்ஸ கங்கைத்திட்டப் பணிகளை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கழிவு முகாமைத்துவம் குறித்தும் இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

குப்பைகளைச் சேதனப் பசளைகளாக மாற்றுவதற்கான திட்டங்களை தயாரிக்குமாறும் அதற்காக அதிகபட்சம் தொழிநுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினரிடம் தெரிவித்தார்.

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் பங்களிப்பை பெற்று குவிந்திருக்கும் மணற்படிவுகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மணலின் விலையை குறைப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதன் மூலம் பல பிரதேசங்கள் முகங்கொடுத்துள்ள வெள்ள அச்சுறுத்தலுக்கும் தீர்வு வழங்க முடியும்.

பேர வாவியை சுத்தப்படுத்தும் திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கும் தீர்மானிப்பட்டது. இதன்போது பேர வாவிக்கு கழிவுகள் சேரும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளவற்றை உடனடியாக மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டது.

அமைச்சர்கள் காமினி லொக்குகே, இந்திக அனுருத்த, அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது. (ஐ)

# கல்வியங்காடு பொதுச்சந்தை வியாபாரிகள் கடையடைப்பு





யாழ்ப்பாணம் மாநகர சபை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்து கல்வியங்காடு பொதுச் சந்தை வியாபாரிகள் கடையடைப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதனால் கல்வியங்காடு பொதுச் சந்தை முற்றாக முடங்கியுள்ளது.

கல்வியங்காடு பொதுச் சந்தையின் பருத்தித்துறை வீதிக்கான வாயிலைப் பெரிதாக்குவது, கழிவகற்றலைச் சீராக முன்னெடுப்பது, வரி அறவீட்டைக் குறைப்பது உள்ளிட்ட வாக்குறுதிகளை யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் நிறைவேற்றவில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## நாளை 09.01.2020 - வியாழக்கிழமை

நட்சத்திரம்: சதுர்த்தசி பி.இ. 2.45 வரை
திதி : மிருகசீரிடம் பி.ப.03.40 வரை

இராகுகாலம் : 02.02 – 03.32
சுப நேரம் : 08.02 – 09.32

# புதையல் தோண்ட வந்தவர்கள் மாங்குளம் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, ஜன. 08

ஏ9 வீதியில், நேற்று முன்தினம் காலை, மாங்குளம் பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது, சொகுசுக் காரில் புதையல் தோண்டும் அதிநவீன இயந்திரத்துடன் பயணித்த நால்வரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், பதுளை, பேருவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களெனவும் இவர்களில் ஒருவர் ஓய்வுப் பெற்ற படைச் சிப்பாய் எனவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மடிக்கணினி, ஸ்கானர் இயந்திரம், 5 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களை, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

தொம்பை வீதி, உடுவில் மேலதிக அலசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி, அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல் லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக் குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை, இயற்றாழை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம் ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

கைவேலியிலிருந்து புதுக்குடியிருப்பு வரை, ஹைட்றாமணி ஆடைத் தொழிற்சாலை, 682வது படைப்பிரிவு முகாம் புதுககுடியிருப்பு, பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாள், கிளாலி, Topical Lanka ஆகிய இடங்களிலும் –

**வவுனியாப் பிரதேசத்தில் -**

கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பகல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், omega line கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், பொன்னவரசங்குளம், அறுகம்புல்வெள, அவுசதப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலும்

– மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பொதுத் தேர்தலில் சு.க. தனிவழி; மைத்திரிபால மந்திராலோசனை



கொழும்பு, ஜன. 08

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவது குறித்து அந்தக் கட்சியின் தலைவரும் ,முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மந்திர லோசனைகளை நடத்தி வருகிறார்.

முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் வேளையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவையில் உரிய இடம் அளிக்கப்படாமை, எதிர்வரும் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தில் மட்டுமே போட்டியிட வேண்டுமென்ற பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்களது வலியுறுத்தல் போன்ற விடயங்களால் மைத்திரிபால கடும் அதிருப்திக்குள்ளாகியுள்ளார் என அறியமுடிந்தது.

இதனால் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுப் பின்னர் பெரும்பான்மை பெரும் தரப்புக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்குவது குறித்து மைத்திரி இப்போது மந்திரலோசனைகளை நடத்தி வருகிறார் எனத் தெரியவருகின்றது. (ஐ)

# பெண் பொலிஸ் அதிகாரியை கடித்த பிரித்தானியப் பெண்!

கொழும்பு, ஜன. 08

காலியில், பெண் உப பொலிஸ் பரிசோதகரின் கையைக் கடித்த குற்றச்சாட்டில் பிரித்தானிய நாட்டுப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹப்பாவன பிரதேசத்தில் தற்காலிகமாக விடுதி ஒன்றில் இந்தப் பிரித்தானியப் பெண் தனது கணவனுடன் தங்கியிருந்தபோது பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது அந்தப் பெண்ணிடமும் அவரது கணவனிடமும் கடவுச்சீட்டு கோரப்பட்டது. இந்நிலையில் பிரித்தானியப் பெண், பொலிஸ் பரிசோதகரின் கையைக் கடித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியப் பிரஜைகளான இவர்கள் கடந்த 10 வருடங்களாக இலங்கைக்கு வந்து செல்கிறார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த இருவரினதும் விசா கடந்த மாதம் 6ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

சந்தேக நபரான பெண்ணுடன் அவரது கணவனும் கைது செய்யப்பட்டுள்ளார். இருவரும் கராப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

பிரித்தானியப் பெண் கடித்தமையால் காயங்களுக்குள்ளான பொலிஸ் பரிசோதகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# சுண்டிக்குளம் காட்டில் 16 கட்டுத்துவக்குகள்!

யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்ப்பாணம், சுண்டிக்குளம் காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட பாரிய தேடுதலில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 16 கட்டுத்துப்பாக்கிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ். விசேட அதிரடிப்படையினரால், பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுண்டிக்குளம் காட்டுப் பகுதியில் நான்கு இடங்களில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த 16 துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகளுக்கமைய இந்தத் துப்பாக்கிகள், விலங்குகளை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிங்கப்பூர் சண்முகம் கொழும்புக்கு வந்தார்



கொழும்பு, ஜன. 08

சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சரான காசிவிஸ்வானந்தன் சண்முகம் நேற்று முன்தினம் இலங்கைக்குப் பயணம் செய்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று முன் தினம் மாலை 4.30 மணியளவில் ஐந்து பேர் அடங்கிய குழுவினருடன் அவர் வந்திறங்கினார்.அவர் இலங்கை அரசு தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ஐ)


SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# நித்தியானந்தாவின் பெண் பக்தை வெளியிட்ட வீடியோவால் சர்ச்சை!

புதுடில்லி, ஜன. 08

தனது உயிருக்கு ஆபத்து எனத் தான் கூறியது ஒன்றரை ஆண்டுக்கு முன்பு வெளியிடப்பட்ட பழைய காணொலி என நித்தியானந்தாவின் பெண் சீடர் தத்துவப் பிரியானந்தா புதிய காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்த ஜனார்த்தன சர்மா என்பவர் தனது 3 மகள்கள், ஒரு மகனை பிடதியில் உள்ள நித்தியானந்தா ஆச்சிரமத்தில் சேர்த்திருந்தார்.

இந்நிலையில் தங்கள் குழந்தைகளை நித்தியானந்தா குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள ஆச்சிரமத்திற்கு கடத்திச் சென்று சிறை வைத்திருக்கிறார் என ஜனார்த்தன சர்மா பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இந்நிலையில், ஆச்சிரமத்தில் சோதனை நடத்திய பொலிஸார், அங்கிருந்த ஜனார்த்தன சர்மாவின் ஒரு மகள், மகனை மீட்டனர். மூத்த மகள் லோபமுத்ரா என்ற தத்துவப்பிரியானந்தா, மற்றொரு மகள் நந்திதா ஆகிய 2 பேரும் ஆச்சிரமத்தில் இல்லை எனத் தெரிவித்தனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த ஜனார்த்தன சர்மா மகள்களை மீட்டு தன்னிடம் ஒப்படைக்கக்கோரி குஜராத் உயர்நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான விசாரணையின்போது நித்தியானந்தா வெளிநாடு தப்பிச்சென்றுவிட்டார் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் லோபமுத்ராவும் நந்திதாவும் மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றான பார்படாஸ் நாட்டில் இருந்து காணொலி வெளியிட்டனர். அதில் தந்தையால் தங்களது உயிருக்கு ஆபத்து உள்ளது. எனவே இந்தியா வர எங்களுக்கு விருப்பம் இல்லை எனத் தெரிவித்தனர். அவர்களது பதிலை நீதிமன்றம் ஏற்கவில்லை.

அத்தோடு, நீங்கள் எந்த நாட்டில் இருக்கிறீர்களோ



அந்த நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தில் ஜனவரி 16 ஆம் திகதிக்குள் ஆஜராகவேண்டும் என உத்தரவிட்டது.

இதற்கிடையே தத்துவப் பிரியானந்தாவின் காணொலியொன்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. அதில் எனது உயிருக்கு ஆபத்து உள்ளது. அடுத்த காணொலி வெளியிடுவதற்குள் நான் உயிரோடு இருப்பேனோ, இல்லையோ எனத் தெரியவில்லை என கதறுகிறார்.

இந்தக் காணொலியை பார்த்த ஜனார்த்தன சர்மா அதிர்ச்சியடைந்தார். இது குறித்து அகமதாபாத் பொலிஸில் முறைப்பாடளித்தார்.

இந்நிலையில் தத்துவப் பிரியானந்தா புதிய காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், உயிருக்கு ஆபத்து என தான் கூறியது ஒன்றரை ஆண்டுக்கு முன்பு வெளியிடப்பட்ட பழைய காணொலி என விளக்கம் அளித்துள்ளார்.

இந்தக் காணொலி புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவை கண்டுபிடிக்கவும் ஜனார்த்தன சர்மாவின் மகள்களைக் கண்டுபிடித்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

# டில்லி யூனியன் பிரதேச சட்டசபைக்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதி தேர்தல்!

## இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு

அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி அரசு அமைந்துள்ள, இந்தியாவின் தேசியத் தலைநகர் டில்லியில், பெப்ரவர் 8 ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடக்க உள்ளது; 11 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. இதை, தலைமைத் தேர்தல் ஆணையம் திங்களன்று அறிவித்தது

டில்லி யூனியன் பிரதேச சட்டசபையின் பதவிக்காலம், பெப்ரவரி 22 இல் முடிவுக்கு வருகிறது. அதையடுத்து, அங்கு சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் திகதியை, தலைமைத் தேர்தல் ஆணையாளர் சுனில் அரோரா அறிவித்தார். அதையடுத்து, அங்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

பெப்ரவரி 8இல் ஒரே கட்டமாக, 70 தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்க உள்ளது. தேர்தல் முடிவுகள், 11 ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளன.

கடந்த, 2015ல் நடந்த சட்டசபை தேர்தலில், ஆம் ஆத்மி கட்சி, 70 இல், 67 தொகுதிகளில் அசத்தல் வெற்றி பெற்றது. மீதமுள்ள மூன்று தொகுதிகளை, பாரதீய ஜனதாக் கட்சி கைப்பற்றியது.

மத்தியில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மீண்டும் அமைந்த பிறகு, டில்லியில் நடக்கும் முதல் சட்டசபை தேர்தல் இது. கடந்தாண்டு நடந்த லோக்சபா தேர்தலில், டில்லியில் உள்ள மொத்தமுள்ள ஏழு தொகுதிகளையும், பா.ஜ.க. கைப்பற்றியது.

மோடி அரசு மீண்டும் அமைந்த பிறகு நடந்த சட்டசபை தேர்தல்களில், மஹாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்டை, பா.ஜ.க. இழந்தது. அதனால், இந்த சட்டசபை தேர்தல், பா.ஜ.கவுக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் இடையே மும்முனைப் போட்டி உள்ளது. இருப்பினும், ஆம் ஆத்மி மற்றும் பா.ஜ.க. இடையேதான் நேரடிப் போட்டி இருக்கும் என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

குடியுரிமை திருத்த சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகிய பிரச்சினைகளை முன்வைத்து, டில்லியில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதைத் தவிர, காற்று மாசு, பெண்களுக்கு பாதுகாப்பு போன்றவையும், இந்தத் தேர்தலில் முக்கிய பிரச்னைகளாக இருக்கும்.

வரும், பெப்ரவரி 1 இல் மத்திய பட்ஜெட் அறிவிக்கப்பட உள்ளது. டில்லியில் தேர்தல் நடக்க உள்ளதால், இந்த பட்ஜெட்டில் மக்களை கவரும் அம்சங்கள் இருக்கும் என, எதிர்பார்க்கலாம்.

”தேர்தல் நடக்கும் ஒரு குறிப்பிட்ட மாநிலத்துக்கான அறிவிப்புகள், பட்ஜெட்டில் இடம்பெறக் கூடா. அது, டில்லிக்கும் பொருந்தும்’ என தேர்தல் ஆணையாளர் சுனில் அரோரா கூறியுள்ளார். கடந்த, 2013 வரை தொடர்ந்து, மூன்று முறை ஆட்சியில் இருந்த காங்கிரஸினால் கடந்த சில தேர்தல்களில், மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. அக்கட்சியின் மூத்த தலைவரும், டில்லி முன்னாள் முதல்வருமான ஷீலா தீட்சித் மறைவுக்குப் பின், முதல் முறையாக சட்டசபை தேர்தலை காங்கிரச் சந்திக்கிறது. இந்தத் தேர்தல் காங்கிரஸ்ஸுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும்.

மத்திய அரசுடன் தொடர்ந்து மோதல் போக்குடன், அரவிந்த் கெஜ்ரிவால் செயல்பட்டு வருகிறார். காற்று மாசு, பாதுகாப்பான குடிதண்ணீர் எனப் பல பிரச்சினைகள், அவருக்குச் சாதகமாக இல்லை. பிரபல தேர்தல் வியூக நிபுணர் பிராந்த் கிரோர், ஆம் ஆத்மிக்கு தேர்தல் வியூகங்களை வகுத்து தர உள்ளார். கடந்த, 2014லஇல், மோடிக்கு இவர் வியூகங்களை வகுத்து தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் ஆட்சியை பிடிக்கும் முனைப்பில் உள்ள ஆம் ஆத்மி கட்சி, தன் பிரசாரத்தை ஏற்கனவே துவக்கி விட்டது. பா.ஜ., சார்பில், பிரதமர் நரேந்திர மோடி, கட்சித் தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ா ஆகியோரும், பிரசாரத்தை துவக்கி விட்டனர்.

முதல்வர் வேட்பாளர் யார் என்பதை அறிவிக்காமல், மோடியை முன்னிறுத்தி, பா.ஜ., தேர்தலைச் சந்திக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. டில்லி தலைமை தேர்தல் அதிகாரி ரன்பீர் சிங் கூறியவை வருமாறு: –

டில்லி சட்டசபை தேர்தலில், 1.46 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். அதில், 80லட்சத்து 55 ஆயிரம் பேர் ஆண்கள்; 66 லட்சத்து 35 லட்சம் பேர் பெண்கள், 815 பேர் மூன்றாம் பாலினத்தவர். வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், வீடு மாறியவர்கள், காலமானவர்கள் பட்டியலில், 11.55 லட்சம் பேர் உள்ளனர். குடியுரிமை திருத்த சட்டத்தின் அடிப்படையில், அகதிகளாக உள்ளவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது குறித்து எந்த உத்தரவும் வரவில்லை.

இந்தத் தேர்தலில், 2.08 லட்சம் இளம் வாக்காளர்கள், முதல் முறையாக வாக்களிக்க உள்ளனர். அதைத் தவிர, 2.05 லட்சம் பேர், 80 வயதைத் தாண்டியவர்கள். மாநிலத்தில், 2,689 இடங்களில், 13 ஆயிரத்து, 750 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். பாதுகாப்பு பணியில், 90 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர். – இவ்வாறு, அவர் கூறினார்.

# சபரிமலை விவகாரம்; 13 முதல் விசாரணை

புதுடில்லி, ஜன. 08

சபரிமலையில் அனைத்து வயதுப் பெண்களையும் அனுமதிப்பதற்கு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய இந்த வழக்கு உச்ச நீதிமன்றின், 9 நீதிபதிகள் கொண்ட அமர்வில் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கும் 2018ஆம் ஆண்டு தீர்ப்பை எதிர்த்து இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு 13ஆம் திகதி முதல் விசாரிக்கப்படும்’ எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் சபரிமலையில் பெண்களை அனுமதிப்பது மட்டுமின்றி முஸ்லிம் மற்றும் பார்சி பெண்களுக்கு வழிபாட்டுத் தலங்களில் இழைக்கப்படும் சர்ச்சைக்குரிய பாகுபாடுகள் குறித்தும் விசாரிக்கப்படும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு 10 முதல் 50 வயதுக்கு உட்பட்ட பெண்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் சபரிமலையில் அனைத்து வயது பெண்களுக்கும் அனுமதி அளித்து கடந்த 2018ஆம் ஆண்டு அதிரடியாக உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக்கோரி இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, இந்த விவகாரத்தை 7 நீதிபதிகள் கொண்ட பெரிய அமர்வுக்கு மாற்றுவதாக கடந்த நவம்பர் 14ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து இந்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிக்க 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு அமைக்கப்பட்டது.

இந்த அமர்விலேயே குறித்த வழக்குகள் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

# ரூ. 9,000 கோடியில் ஒரு ரூபா கூட செலுத்தவில்லை மல்லையா

## உச்ச நீதிமன்றில் மத்திய அரசு!

புதுடில்லி, ஜன. 08

9,000 கோடி ரூபாக் கடனில் விஜய் மல்லையா இதுவரை ஒரு ரூபாயைக்கூட திருப்பி செலுத்தவில்லை என மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

வங்கியில், 9 ஆயிரம் கோடி ரூபா கடன் வாங்கி விட்டு அதனைத் திருப்பிச் செலுத்தாமல் விஜய் மல்லையா வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றமையையடுத்து, அவரது சொத் துகளை முடக்கும் நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டது.



இதனை அடுத்து கடன்களை திருப்பிச் செலுத்தத் தயாராக இருப்பதாகவும், தனது மற்றும் தனது உறவினர்களின் சொத்துகளை முடக்கும் வேலைகளை நிறுத்தக் கோரியும் விஜய் மல்லையா சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தமனு, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது வங்கிகளில் கடன் வாங்கி விட்டு வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள விஜய் மல்லையா, கடன்களை திருப்பி செலுத்துவதாகக் கூறினாலும் இதுவரை ஒரு ரூபாயை கூட திருப்பி செலுத்தவில்லை என மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மேலும், உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் இந்த வழக்கைக் காரணம் காட்டி லண்டன் நீதிமன்றத்தில் விஜய் மல்லையாவை நாடு கடத்துவது சம்பந்தமான வழக்கில் தீர்ப்பு வழங்கக்கூடாது என அவர் கோரி வருவதையும் நீதிபதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

இதற்கு கடும் கண்டனங்களை தெரிவித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் இந்த வழக்கை காரணம் காட்டி உலகிலுள்ள எந்த நீதிமன்றத்திலும் விஜய் மல்லையா கால அவகாசம் கூறுவதோ, வழக்கில் இருந்து தப்பிக்கவோ முயற்சி மேற்கொள்ளக்கூடாது என தெரிவித்தனர்.

# வருட வித்தியாசத்தில் பிறந்த இரட்டையர்கள்

## அமெரிக்காவில் சுவாரசியம்





பொதுவாக இரட்டை குழந்தைகள் சில நிமிட இடைவெளியில் பிறப்பார்கள். ஆனால் அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் ஒரு வருட இடைவெளியில், ம்ழிஜ நூஷ்யியிஷ்ழிது என்ற பெண்மணி இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்ததுள்ளார்.

என்ன ஒரு வருடமா எனத் திகைப்பு வேண்டாம். ஆம்..சமீபத்தில் பிறந்த புத்தாண்டு காரணமாக இந்த சுவாரசிய சம்பவம் நடந்துள்ளது. st.vincent carmel என்ற மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார் Dawn Gilliam. அவருக்கு இரட்டை குழந்தைகள் பிறக்கும் என மருத்துவர்கள் ஏற்கனவே கூறி இருந்தமையால், உறவினர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர்.

இந்நிலையில் மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட Dawn Gilliam விற்கு, கடந்த டிசம்பர் 31ஆம் திகதி இரவு 11.37க்கு பெண் குழந்தை பிறந்தது. பின்னர் சரியாக அரை மணி நேரம் கழித்து அதாவது 2020 ஆம் ஆண்டு தொடக்கமான, ஜனவரி முதலாம் 12.07 மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது.

முதலில் பிறந்த பெண் குழந்தைக்கு Joslyn என்றும், அடுத்த வருடம் பிறந்த இரட்டையர்களில் ஒருவரான ஆண் குழந்தைக்கு Jaxon என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

அரை மணி நேர இடைவெளியில் பிறந்திருந்தாலும், Joslyn மற்றும் Jaxon ஒரே நாளில், பிறந்த நாளை கொண்டாட முடியாமல் போயுள்ளது. இந்த இரட்டையர்கள் வெவ்வேறு திகதிகள் மற்றும் வெவ்வேறு ஆண்டுகளில் பிறந்தநாளை கொண்டாடுவர் என்பது, நிச்சயம் அவர்களது பெற்றோருக்கு சுவாரசியமான நிகழ்வாக இனி இருக்கும்.

# 5 வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து 5 பேர் உடல் நசுங்கிப் பலி: 60 பேர் காயம்

## அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் பயங்கரம்



நியூயோர்க்,ஜன.08

அமெரிக்காவில் 5 வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து ஏற்பட்டதில் 5 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள பிளசன்ட் மவுண்ட் நகரில் மலைப் பகுதியை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலையில் வாகனங்கள் அணிவகுத்து சென்று கொண்டிருந்தன. அப்போது சுற்றுலா பஸ் ஒன்று முன்னால் சென்றுகொண்டிருந்த சரக்கு லொறியை முந்தி செல்ல முற்பட்ட போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் கவிழ்ந்தது. பின்னர் அந்த பஸ் மீது லொறி மோதிக் கவிழ்ந்தது.

அதனைதொடர்ந்து, பின்னால் வந்து கொண்டிருந்த 2 சரக்கு லொறிகள் மற்றும் ஒரு கார் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாயின.

இந்தக் கோர விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர்.

# போலந்தில் கோழிகளை தாக்கும் பறவைக் காய்ச்சல்

போலந்து நாட்டில் பரவிவரும் பறவைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கோழிகள் அழிக்கப்பட்டுள்ளன.

போலந்து நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள லுப்லின் (Lublin) மாகாணத்தில், கோழிகளுக்கு H5H8 என்ற பறவைக் காய்ச்சல் வேகமாக பரவுகிறது. பறவைக் காய்ச்சலால் 25 ஆயிரம் கோழிகள் உயிரிழந்த நிலையில், நோய் மேலும் பரவாமல் தடுக்க, 60 ஆயிரம் கோழிகள் கொல்லப்பட்டன. இதேபோன்று போலந்தின் மேற்கு பகுதியில், 65 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டன.



# இத்தாலியில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டத்துக்குள் கார் புகுந்ததில் 6 பேர் உடல் நசுங்கிப் பரிதாபச் சாவு

ரோம்,ஜன.08

இத்தாலியில் சுற்றுலாப் பயணிகள் கூட்டத்துக்குள் கார் புகுந்து விபத்து ஏற்பட்டதில் 6 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இத்தாலியின் தெற்கு டைரோல் மாகாணத்தில் உள்ள மலைப்பிரதேசமான லூடாகோ நகர் புகழ்பெற்ற சுற்றுலா தலமாக விளங்குகிறது. இங்கு பனிச்சறுக்கு விளையாட்டுகள் மிகவும் பிரபலம். இதனால் பல்வேறு நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு குழுவினர் லூடாகோ நகருக்கு சுற்றுலா வந்தனர். இவர்கள் ஞாயிறன்று பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, உள்ளூர் நேரப்படி நள்ளிரவு 1 மணிக்கு அங்குள்ள ஒரு சாலையில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர்.

அப்போது, அங்கு அதிவேகமாக வந்த கார் ஒன்று சுற்றுலா பயணிகளின் கூட்டத்துக்குள் புகுந்தது. இதில் கார் சக்கரங்களில் சிக்கி 6 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் 11 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

ஆரம்பத்தில் இதை ஒரு பயங்கரவாத தாக்குதல் என்று நினைத்து மக்கள் கடும் பீதியடைந்தனர். இதுபற்றி தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காரை ஓட்டி வந்த நபரை மடக்கிப் பிடித்தனர். அப்போது அவர் அளவுக்கு அதிகமான மது போதையில் இருந்தமை தெரியவந்தது.



இதையடுத்து, இது பயங்கரவாதத் தாக்குதல் இல்லை என்றும் மதுபோதை மற்றும் அதிவேகத்தால் ஏற்பட்ட விபத்து என்றும் தெரியவந்தது. அதனை தொடர்ந்து, விபத்தை ஏற்படுத்திய உள்ளூரைச் சேர்ந்த 28 வயதான வாலிபரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# அமெ. கொன்ற ஈரான் தளபதியின் இறுதிச் சடங்கில் ஜனசமுத்திரம்!

## லட்சக்கணக்கானோர் திரண்டு தெஹ்ரானில் அஞ்சலி

தெஹ்ரான், ஜன்.08

அமெரிக்காவின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரான் இராணுவத் தளபதியின் உடல் தலைநகர் தெஹ்ரானில் அடக்கம் செய்யப்பட்டது. லட்சக்கணக்கானோர் திரண்டு அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய வான்தாக்குதலில் ஈரான் நாட்டு இராணுவத் தளபதி காசிம் சுலைமானி கொலை செய்யப்பட்டார். அவர் ஈரானின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக அறியப்பட்டவர். காசிம் சுலைமானி கொல்லப்பட்ட பிறகு ஈரான் – அமெரிக்கா இடையே போர் உருவாகும் சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில் ஈராக்கில் இருந்து கொண்டுவரப்பட்ட சுலைமானியின் உடலுக்கு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நேற்று முன்தினம் இறுதி சடங்குகள் நடந்தன. அங்குள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. சுலைமானியின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு லட்சக்கணக்கான மக்கள் அந்த பகுதியில் குவிந்தனர்.

அவர்கள் அனைவரும் கறுப்பு நிற உடையில் வந்திருந்தனர். இதனால்



தெஹ்ரான் நகரமே கறுப்பு நிறமாக மாறியது போல காட்சியளித்தது. மக்கள் தங்கள் கைகளில் கறுப்பு மற்றும் ஈரான் நாட்டு கொடிகளை ஏந்தியபடி அமெரிக்காவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிப் பேரணியாகச் சென்றனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த சுலைமானி உடலுக்கு, ஈரானின் மூத்த மத தலைவர் அயதுல்லா அலி காமெனி தலைமையில் இறுதி சடங்குகள் நடந்தன. இதில் அதிபர் ஹசன் ருஹானி உள்பட முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதி சடங்கின் போது, அயதுல்லா அலி காமெனி கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். அந்தக் காட்சி பார்ப்பவர்கள் மனதை உருக்கும் விதமாக அமைந்தது. சுலைமானியின் இறுதிசடங்கு நிகழ்ச்சிகள் அனைத்தும் அந்நாட்டு ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

பின்னர் சுலைமானியின் உடல் பெரிய வாகனத்தில் வைக்கப்பட்டு, மக்கள் வெள்ளத்தில் மிதந்தவாறே கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதற்கிடையே ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகளை வெளியேற்றுவது தொடர்பாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ஈராக் மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் எனப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து டிரம்ப் கூறுகையில், பல பில்லியன் டொலர் மதிப்பிலான விலை உயர்ந்த விமானத் தளங்களை கட்ட அமெரிக்கா அளித்த பணத்தை ஈராக் திரும்ப அளிக்கும்வரை அமெரிக்கப் படைகள் அந்த நாட்டிலிருந்து வெளியேறா. எங்கள் படைகளை வெளியேறக் கட்டாயப் படுத்தினால் நாங்கள் அவர்கள் இதற்கு முன்னர் பார்த்திராத வகையில் பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என்றார்.



காலைக்கதிர் Kalaikathir



# பொருத்தமான தலைமை இருந்தால் தமிழீழம் சாத்தியப்படுவதற்கேற்ற சர்வதேச சூழல் உண்டு




முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்ததோடு ஒரு புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு தோன்றியுள்ளது.

1990ஆம் ஆண்டுடன் பனிப்போர் யுகம் முடிந்து பனிப்போரின் பின்னான யுகம் தோன்றியது.

2001ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீதான பின்லேடனின் விமானத் தாக்குதல்களோடு பனிப்போரின் பின்னான யுகம் தோன்றியது.

முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்ததோடு இந்தோ – பசுபிக் பிராந்திய கொள்கையின் மூலம் மேலும் புதிய சர்வதேச ஒழுங்கு தோன்றியது.

இதனை இந்தோ – பசிபிக் சர்வதேச ஒழுங்கு என்று கூறலாம். இதனை ஆழமாக புரிந்து கொள்ளாமல் ஈழத் தமிழர்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க முடியாது.

தேசிய விடுதலைப் போராட்டம் என்பது எப்போதும் சர்வதேச உறவுகளோடும் சர்வதேசப் பிரச்சினைகளோடும் சம்பந்தப்பட்டதாகும். ஆதலால் தேசிய இனப் பிரச்சினை என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை என்ற கண்ணோட்டம் மிகவும் அத்தியாவசியமானது.

சர்வதேச அரசியல் ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கு முள்ளிவாய்க்கால் யுத்தம் ஓர் அச்சாணியாய் அமைந்தது என்பதைப் புரிந்துகொண்டால் தமிழீழப் பிரச்சினையில் சர்வதேச முக்கியத்துவம் துலாம்பரமாக தெரியவரும்.

முதலாம், இரண்டாம் யுத்தங்களின் போதெல்லாம் அமெரிக்கக் கண்டங்களில் அமெரிக்க தேசம் பாதுகாப்பாக இருந்தது. பனிப்போர் காலத்திலும் மேற்படி அமெரிக்கக் கண்டங்களில் அமெரிக்கா பாதுகாப்பாகவே இருந்தது.

ஆனால் தனிப்பொருள் முடிந்ததன் பின்னான காலத்தில் அமெரிக்காவின் இருதயம் என வர்ணிக்கப்படக் கூடிய வர்த்தக கேந்திர நிலையமான இரட்டைக் கோபுரங்கள் மீது பின்லேடன் வெற்றிகரமாக தாக்குதல்களை மேற்கொண்டு அந்த இரட்டை கோபுரங்களைத் தகர்த்து எறிந்தார்.

ஆனாலும் அந்தத் தாக்குதல்கள் அமெரிக்காவுக்கு உள்ளிருந்தே வெடித்ததினால் அது தன் இரு கண்டங்களைக் கடந்த ஒரு பாதுகாப்பு வலயத்தை உருவாக்க வேண்டி இருக்கவில்லை. மாறாக சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு என்ற ஒரு வியூகம் அதற்கு போதுமாக இருந்தது.

சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு என்ற உலகளாவிய வியூகம் மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளை மையமாகக் கொண்டு காணப்பட்டது. இதற்குள் ஆப்கானிஸ்தானும் இழுத்து விடப்பட்டிருந்தது.

ஆதலால் பனிப்போரின் பின் பின்னான யுகத்தில் அமெரிக்காவின் முழுக்கவனமும் மேற்படி மத்தியவ்கிழக்கு, வளைகுடா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளை கொண்ட ஒரு பரந்த தொடர் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு காணப்பட்டது.

எனவே, பனிப்போரின் பின்னான காலம் என்று சொல்லப்படுகின்ற 2001ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்ததான அந்த காலப்பகுதியில் அமெரிக்காவின் முழுக் கவனமும் மேற்படி ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகளையும் மையமாகக் கொண்டு அமைந்திருந்தது.

இக்காலப்பகுதியில் சீனா தனது பட்டுப்பாதை வியூகத்துக்கான One Belt one Road (Belt and Road Initiative) அச்சாணியாக இலங்கைத் தீவை ஆக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டது. 2005ஆம் ஆண்டு ராஜபக்ஷக்கள் பதவிக்குவர உதவியதுடன் அவர்களைத் தொடர்ந்து பதவியில் பாதுகாப்பதற்காகவும் முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் ராஜபக்ஷக்களுக்கு சீனா தோளோடு தோள்கொடுத்து உதவியது.

வீட்டோ அதிகார பலத்தைக் கொண்ட சீனாவின் ஆதரவு யுத்த சூழலில் ராஜபக்ஷக்களுக்கு வலக்கரமாய் அமைந்தது. அரசியல், இராஜதந்திரம், இராணுவம், புலனாய்வு, நிதி என சீனாவின் பல்பரிமாண உதவிகளுடன் ராஜபக்ஷக்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றதும் சீனாவின் மீது ராஜபக்ஷக்கள் அதிகூடிய விசுவாசத்துடன் செயற்படும் நிலை பெரிதும் தோன்றியது.

உலக அரங்கில் சீனாவைத்தான் ராஜபக்ஷக்கள் உண்மையான விசுவாசமிக்க நண்பனாகக் கருதினர். இதனால் இந்துமா கடலில் மேற்படி சீனாவின் பட்டுப்பாதை வியூகத்துக்கு பொருத்தமானஅச்சாணியாக இலங்கையை ஆக்கிக் கொள்வதற்கு ஏதுவான வகையில் சீனாவிற்கு ராஜபக்ஷக்கள் கைகொடுக்கத் தொடங்கினர்.

இதனைக் கண்டு மேற்குலகமும் இந்தியாவும் சீற்றம் அடைந்தன. அமெரிக்காவின் பிரதான கவனம் மேற்படி ஆப்கானிஸ்தான் மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளுக்குள் புதையுண்டதாக அமைந்திருக்க அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சீனா இலங்கையை மையமாகக் கொண்ட இந்துமா கடல் ஆதிக்கத்திற்கான வியூகத்தை வெற்றிகரமாக அமைத்துக் கொண்டது.

1976ஆம் ஆண்டு மாசேதுங்கின் மரணத்தைத் தொடர்ந்து பதவிக்குவந்த டெங் ஸியாஓ பிங் நால்வகை நவீனமயமாக்க கொள்கையை முன்வைத்து சீனாவை முற்றிலும் நவீன மயமாக்குவதில் ஈடுபட்டார். சுமாராக கால் நூற்றாண்டு காலத்திற்குள் சீனா ஒரு புதிய நவீன தேசமாக உலகில் எழுச்சி பெற்றது. உற்பத்தி சக்திகள் பெருகின. பண்ட உற்பத்தி அதிகரித்தது. தொழில்நுட்பம் பெரிதும் வளர்ந்தது. இதனால் சீனா பண்ட

வர்த்தகத்திற்காகவும் மூலப்பொருள் தேடலுக்காகவும் உலகளாவிய பொருளாதார, இராணுவ, ஏகாதிபத்திய அரசியலில் ஈடுபட வேண்டியது தவிர்க்க முடியாததாய் அமைந்தது.

அத்தகைய ஏகாதிபத்திய வியூகத்துக்கான முதுகெலும்பாகவே பட்டுப்பாதை – One Road one Belt- என்ற சமுத்திரங்களையும், கண்டங்களையும் இணைக்கும் ஒரு உலகளாவிய கொள்கையை வகுத்துக் கொண்டது.

ஐரோப்பிய வல்லரசுகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு பாதுகாப்புக் கொள்கையாகவே 1823ஆம் ஆண்டு அமெரிக்கா மொன்றோ கோட்பாட்டை வகுத்துக் கொண்டது. அதன்படி வட தென் அமெரிக்கக் கண்டங்கள் இரண்டும் அமெரிக்காவின் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டவை என்ற கொள்கையெள அமெரிக்கா முன்வைத்தது.

ஆனால் 21ஆம் நூற்றாண்டில் 2009ஆம் ஆண்டு நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் யுத்தத்தோடு இலங்கையையும் மையமாகக் கொண்ட பட்டுப்பாதை வீதி வியூகத்தின் வழியாக சீனா இந்து சமுத்திரத்தில் பரவி அது பசுபிக் சமுத்திரத்திற்கு ஊடாக அமெரிக்கா வரை விரியும் ஆபத்தை கொண்டதாக அமெரிக்கா கருதத் தொடங்கியது.

இத்தகைய பின்னணியில் அமெரிக்கா நோக்கிய சீனாவின் விரிவாக்கத்தை தடுக்கும் வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வகுக்கப்பட்ட இரு அமெரிக்கக் கண்டங்களையும் தழுவிய மொன்றோ கோட்பாட்டின் நீட்சியாக 2011ஆம் ஆண்டு இந்தோ – பசிபிக் பிராந்திய கோட்பாட்டை அமெரிக்கா வடிவமைத்தது.

ஆசியப் பேரரசாக எழுச்சி அடைந்துள்ள சீனாவை இன்னொரு ஆசியப் பெரும் அரசான இந்தியாவின் துணை கொண்டு ஆசியாவுக்குள் முடக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு எழுந்துள்ளது.

வடக்கே எல்லைப்புற நாடான சீனாவின் அச்சுறுத்தல், மேற்கே அணுவாயுத வல்லமை கொண்ட இஸ்லாமிய நாடான பாகிஸ்தான், கிழக்கே இஸ்லாமிய நாடான பங்களாதேஷ், உள்நாட்டில் 21 கோடி மக்களைக் கொண்ட முஸ்லீம் சவால், பாகிஸ்தானில் 20 கோடி முஸ்லிம்கள், பங்களாதேஷில் 19 கோடி முஸ்லிம்களென மொத்தத்தில் இந்தியாவுக்கு உள்ளேயும் அயலிலும் 60 கோடி முஸ்லிம்களைக் கொண்ட சவால் என்ற கண்ணோட்டத்தை கொண்டிருக்கும் இந்திய அரசு மேற்படி அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் திட்டத்துக்குள் தன்னையும் இணைத்துக்கொள்ள தவறாது.

மத்திய கிழக்கு – வளைகுடா நாடுகள் உள்ளிட்ட மொத்தம் 24 முஸ்லிம் நாடுகளின் மொத்த மக்கள் தொகை சுமாராக 51 கோடி. எனவே இத்தகைய மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாட்டுக்கு உட்பட்ட முஸ்லிம் பிராந்தியத்தின் சனத் தொகையை விடவும் தென்னாசியாவில் வாழும் முஸ்லிம்களின் சனத் தொகை 9 கோடியால் அதிகம் என்ற நிலையில் முஸ்லிம்கள் மீதான அச்சம் இந்திய தரப்பில் அதிகம் இருக்க வாய்ப்புண்டு.

ஆதலால் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் மிக இறுக்கமான மேற்குலக சார்பு கொள்கையை இந்தியா பற்றி பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது அடிப்படையில் அமெரிக்கத் தலைமையிலான மேற்குலகினதும் இந்தியாவினதும் நீண்ட கால கண்ணோட்டத்தில் முஸ்லிம்கள் அவர்களின் ஒரு பொது எதிரி என்ற எண்ணம் உண்டு.

எனவே மொத்தத்தில் மேற்குலகுக்கும், இந்தியாவிற்கும், சீனாவும், முஸ்லிம்களும் பொதுஎதிரிகள் என்கின்ற ஒரு வரலாற்றுப் போக்கு உண்டு. இதனால் அமெரிக்க தலைமையிலானமேற்குலகிற்கும், இந்தியாவுக்குமிடையே இருதரப்பு நலன்களின் அடிப்படையில் இவர்களிடையேயான உறவுகள் மேலும் மேலும் வலுவடையும்.

இப்பின்னணியில் இந்தியாவை தலை ஊசியாக கொண்டு ஏனைய இந்தோ – பசிபிக் நாடுகளை அந்த ஊசியில் கொழுவி ஒரு King pin கோட்பாடு அமெரிக்காவால் இங்கு வடிவமைக்கப்படலாயிற்று. வரப்போகும் சில பத்தாண்டுகளுக்கு இதுவே உலக ஒழுங்கில் பிரதானகொள்கையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அந்தவகையில் இந்திய அமெரிக்க உறவுகளும், பெறப்போகும் சில பத்தாண்டுகள் மிகப் பலம் மிக்கவையாக அமையும். ஆதலால் முழு மேற் குலகமும் கூடவே ஜப்பானும் இந்தியாவுடன் பலமானஉறவுகளை கொண்டவையாக அமையும். இவைகளுக்கிடையே சிறுசிறு சலனங்கள் ஏற்படுவது இயல்பு.

ஆனால் அடிப்படையில் ஆழமான உறவு நிலவும்.

இந்தவகையில் பட்டுப்பாதை அரசியல், இராணுவம் ஒருபுறமும் இந்தோ – பசிபிக் அரசியல்இராணுவம் இன்னொரு புறமுமென இரு முனை வல்லரசு அரசியல் சக்திகளுக்கு இடையேயான போராட்டத்தில் இலங்கை அச்சாணியாய் அமைகிறது. இந்த அச்சாணியில் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஒரு முக்கிய பகுதியாகும்.

வரப்போகும் சில ஆண்டுகளுக்குள் இலங்கையை மையமாகக் கொண்ட இந்தப் போட்டிக் களம் பெரிதும் கூர்மையடையும். ராஜபக்ஷக்கள் தமிழ் பகுதிகளை விரைவான சிங்களமயமாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

தமிழரை இலங்கை அரசியலில் ஒரு சக்தி அற்றவர்களாக ஆக்கிவிட்டால் தமிழரின் பெயரால் இலங்கையில் தலையிடுவதற்கான வாய்ப்பு இந்தியாவிற்கு இல்லாத போய்விடுமென்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் தமிழின அழிப்பை ராஜபக்ஷக்கள் பெரிதும் துரிதப்படுத்துவார்கள்.

இது, இந்தியாவுக்கும் கூடவே மேற்குலகத்திற்கும் பாதகமாய் அமையும்.

தமிழ் பகுதிகளை கபளீகரம் செய்து இலங்கை முழுவதையும் சிங்கள மயமாக்குவது என்பது இலங்கையை சீன மயமாக்குவது என்பதற்கு சமனாகும். இலங்கை முழுவதும் சீன மாயமானால்இந்தியாவுக்கு எதிரான ஒரு வெடிகுண்டு கிடங்காக அது மாறும்.

முழு இலங்கையிலும் தமிழ் நிலப்பரப்பு அதிகம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. அது எஞ்சிய இலங்கையும் அன்னியரின் கைக்கு போவதை கட்டுப்படுத்தாத நிலப்பகுதி ஆகும்.

ஆதலால் நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் தமிழீழம் பிரிய வேண்டியது தவிர்க்கமுடியாத எதார்த்தமாய் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் கண் முன் தோன்றும். இது விருப்பு வெறுப்புக்களை கடந்த ஓர் அரசியல் நியதியாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இதனை நோக்கி தமிழ் தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் செயற்பட்டால்இதனை சாத்தியமாக்குவது இலகு. இது விடயத்தில் மெத்தனமான அரசியல் போக்கை தமிழ்த்தலைவர்கள் மேற்கொள்வதன் பின்னணியில் தமிழ் பகுதிகள் விரைவான சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டால் நிலைமை கவலைக்கிடமாய் அமையும்.

வரலாற்றில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்பதற்காக அவற்றை சரிவரக் கையாள தவறினால் அவை எதிர்வளமாய் அமைந்திட முடியும். பெரிதளவு வாய்ப்புகள் உண்டாயினும் சிறிய தவறுகள்கூட பெரிதளவு தோல்விக்கு வழிவகுத்துவிடும்.

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு நிதி வழங்குவதில் சிக்கல் நிலை

## ஒரு பகுதியையாவது வழங்க இணக்கம்



யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்ப்பாணத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட 4 ஆயிரத்து 86 வீடுகளுக்கும் நிதி ஒதுக்கீடு இல்லை. அவை தேர்தலுக்காக மக்களை ஏமாற்றுச் செயற்பாடாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

எனவே அரசின் திட்டத்தை நம்பி பெரும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் கடனைப் பெற்று வீடுகளை அமைத்த குடும்பங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு அதிகாரிகள் குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்து ஆராய்ந்து ஒரு பகுதி நிதியை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் வீடமைப்புத்துறை அமைச்சராக சஜித் பிரேமதாஸ இருந்த 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வீடமைப்பு அதிகார சபையால் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலம், பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்ட புள்ளியிடலின் அடிப்படையில் 4 ஆயிரத்து 89 குடும்பங்களுக்கு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலான வீட்டுத் திட்டமே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டது. எனினும் சிறுபகுதி நிதி அவர்களுக்கு வழங்கப்பட்டு வீடமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டபோதும் பெரும்பகுதி நிதி பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் அதிகூடிய வட்டியில் வெளிநபர்களிடம் கடனைப் பெற்றும் சொத்துக்கள், நகைகளை விற்றும் பயனாளிகளில் பலர் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்தினர். மேலும் சிலர் நிதியின்மையால் வீடமைக்கும் பணியைப் பாதியிலேயே நிறுத்திக்கொண்டனர்.

இந்த நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின் தமக்கான நிதி கிடைக்குமா என்ற சந்தேகத்தில் பயனாளிகள் உள்ளனர்.

இது தொடர்பில் வீடமைப்புத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் உள்ளிட்டவர்களுடன் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அவரது செயலாளர் குலேந்திரன் சிவராம், பிரதேச செயலர்கள், வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட முகாமையாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட 4 ஆயிரத்து 86 வீடுகளில் 2018ஆம் ஆண்டில் 718 வீடுகளும் 2019ஆம் ஆண்டில் 18 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய பயனாளிகள் நிதி கிடைக்காததால் முழுமையாக தமது வீடுகளைக் கட்டி முடிக்கவில்லை என்று அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசால் வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாடுமுழுவதும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வீடுகள் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு என வழங்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டையில் மாத்திரம் 60 ஆயிரம் வீடுகளுக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வீடு உள்ள ஒருவருக்கு தேர்தல் பணி செய்வதற்காக அவிசாவளையில் வீட்டுத்திட்டத்தில் வீடு வழங்கப்பட்டுள்ளது. இவற்றை ஆராய்ந்ததால் கடந்த அரசால் நிதி ஒதுக்கீடு இன்றி வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை நிறுத்துவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

எனினும் மீண்டுவரும் வடக்கு மக்களின் நிலையறிந்து அங்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். எனினும் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை.

அதனால் வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வீட்டுத் திட்டப் பயனாளிகள் நிலைமைகளை ஆராய்கின்றேன். பயனாளிகளுக்கு நிதியை வழங்க ஆயிரத்து 30 கோடி ரூபா வேண்டும். ஒரு பகுதி நிதியை விடுவிக்க ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்துகின்றேன்.

அத்துடன், இந்த மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்துக்கு நேரில் வருகை தந்து மக்களின் பிரச்சினைகளை ஆராய்கின்றேன் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, பிரதேச செயலர்களிடம் தெரிவித்தார். (ஐ)

# முன்னாள் எம்.பி. சரணவுக்கு சிறை



கொழும்பு, ஜன. 08

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனவுக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரச வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமைக்காகவே அவருக்கு இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக சரண குணவர்த்தன பணிபுரிந்தார்.

இந்தக் காலப் பகுதியில் அரச வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை குறித்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# பதவியிறக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி



கொழும்பு, ஜன. 08

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரான சஞ்ஜீவ பண்டாரவை தற்காலிகமாக, பதவி இறக்கம் செய்ய தேசிய பொலிஸ் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராகக் கடமையாற்றும் சஞ்ஜீவ பண்டாரவை பொலிஸ் அத்தியட்சராகப் பதவி இறக்கம் செய்யத் தேசிய பொலிஸ் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அது குறித்து அவரது சீருடையில் உள்ள ஒரு நட்சத்திரத்தை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு தககுதல்கள் இடபெற்றபோது, சஞ்ஜீவ பண்டார கொழும்பு வடக்கு பொலிஸ் அத்தியட்சராகக் கடமையாற்றிய நிலையில், முன் கூட்டி உளவுத் துறை வழங்கிய தகவல்களை அவர் கணக்கில் கொள்ளாது செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வங்காலைப் படுகொலையின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல்!

மன்னார், ஜன. 08

மன்னார் – வங்காலையில், 1985ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன், மற்றும் அவருடன் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 35ஆவது ஆண்டு நினைவு தினம், வங்காலை புனித அன்னாள் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்னால், நேற்று முன் தினம் காலை 7 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ)








# செரீனா முதல் சுற்றில் வெற்றி!

ஒக்லாந்து பகிரங்க ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், வெற்றி பெற்றுள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும், இத்தாலியின் கமிலா ஜியார்ஜியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், முதல் செட்டை ஆக்ரோமாக விளையாடி செரீனா வில்லியம்ஸ் 6 - 3 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டிலும் தனது ஆக்ரோத்தை தொடர்ந்த செரீனா வில்லியம்ஸ் செட்டை 6 -2 என கைப்பற்றி வெற்றி பெற்றார்.




# நடுவரிடம் வாக்குவாதம் செய்த டேவிட் வோர்னர்!

நியூசிலாந்து அணிக்கெதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் நடுவர் 5 ஓட்டங்கள் அபராதம் வழங்கியமையால், ஆஸ்திரேலியா அணியின் அதிரடி ஆட்டக்காரரான டேவிட் வோர்னர் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் இரு அணிகளுக்கிடையே நடந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி அபார வெற்றி பெற்று தொடரை 3 – 0 என்று தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையே நடந்த மூன்றாவது போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸின் போது, துவக்க வீரரான வோர்னர் பந்துகளை வீணடிக்காமல் ஓட்டங்கள் எடுப்பதிலே கவனமாக இருந்தார்.

இதனால் ஒரு ஓட்டம், இரண்டு ஓட்டம் என ஓடி, ஓடி எடுத்தார். அப்படி ஆட்டத்தின் 52வது ஓவரின் போது வார்னருடன் ஜோடி சேர்ந்து விளையாடிய லபுனே செய்த தவறால் நியூசிலாந்து அணிக்கு 5 ஓட்டங்களை நடுவர் அலீம் தார் வழங்கினார்.

இதனால் அதிர்ச்சியடைந்த வார்னர், உடனடியாக இது குறித்து நடுவர் அலீம் தார்ரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பொதுவாக மைதானத்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஓடும் போது, மைதானத்தின் தடை செய்யப்பட்ட பகுதிகளிலோ, அல்லது நடுவிலோ வேண்டும் என்று உள்நோக்கத்துடன் ஆடுகளத்திற்கு சேதம் விளைவிக்கும் வகையில் ஓட்டம் ஓடக் கூடாது.

ஆனால் வோர்னரும், லபுனேும், நாதன் லயன் வழக்கமாக டார்கெட் செய்து வீசும் பகுதிகளிலேயே ஓடினர். ஏனெனில் இந்த போட்டியில் ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் சிறப்பாக வீசி வருவதால், அவருக்கு சாதகமாக்கும் வகையில் ஓடியுள்ளனர்.

இதனால் 50 வது ஓவரின் போது நடுவரான அலீம் தர் லபுனேுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால் 52ஆவது ஓவரில் வோர்னர் மற்றும் லபுனே இரண்டு பேரும் மீண்டும் ஆடுகளத்திற்குள் ஓடியதால், அலீம் தார் ஆஸ்திரேலியா அணிக்கு 5 ஓட்டங்கள் அபராதம் விதித்தார்.

அதாவது இந்த 5 ஓட்டம் நியூசிலாந்து அணிக்கு தரப்படும், முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 251 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தற்போது அலீம் தார் 5 ஓட்டம் அபராதம் விதித்த பின் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸ் 256 ஓட்டங்கள் எடுத்ததாக குறித்துக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



# இதற்காகத்தான் மத்தியூஸை ஓரங்கட்டினோம்!

இந்தியாவுக்கு எதிரான முதல் ரி - 20 போட்டிக்கான இலங்கையின் விளையாடும் 11 வீரர்கள்



பட்டியலிருந்து சகலதுறை வீரர் அஞ்சலோ மத்தியூஸை வெளியேற்றியமை அணி நிர்வாகத்தின் ஒருமித்த முடிவாகும் என்று இலங்கை அணி மேலாளர் அசந்த டி மெல் விளக்கமளித்துள்ளார்.

கடைசியாக ஓகஸ்ட் 2018 இல் ரி - 20 போட்டியில் விளையாடிய 33 வயதான மத்தியூஸ், இந்திய சுற்றுப்பயணத்திற்கான அணியில் திரும்ப அழைக்கப்பட்டார்.

மத்தியூஸுக்கு பந்துவீச்சில் போதுமான பயிற்சி இல்லை. எனவே முதல் போட்டியில் அவரை விளையாட வேண்டாம் என்று அணித்தலைவர் லசித் மலிங்க, பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் மற்றும் அணி மேலாளர் ஆகிய நாங்கள் மூவரும் முடிவு செய்தோம்.

மீதமுள்ள இரண்டு போட்டிகளில் மத்தியூஸ் விளையாடுவாரா என்பதை எங்களால் உறுதியாகச் சொல்ல முடியாது என இந்திய சுற்றுப்பயணத்திற்கான இலங்கை அணி தேர்வாளருமான டி மெல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணி திங்கள்கிழமை காலை இந்தூருக்கு புறப்பட்டது. இரண்டாவது ரி -20 போட்டி ஜனவரி 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திட்டமிடப்பட்டுள்ளதால் போட்டிக்கான பயிற்சிக்கு எங்களுக்கு நேரம் இல்லை.

கடைசி இரண்டு போட்டிகளுக்கு இடையில் கூடுதலாக ஒரு நாள் இடைவெளி உள்ளது. ஆனால் முதல் இரண்டு போட்டிகளுக்கு இடையில் இல்லை, இருந்திருந்தால் வரவேற்கப்பட்டிருக்கும்.

ஆனால், இந்தியா - இலங்கை தொடரின் திட்டமிடல் இரண்டு வாரியங்களுக்கிடையிலான முடிவாகும் என்று இலங்கை அணி மேலாளர் அசந்த டி மெல் தெரிவித்துள்ளார்.

# பிரிஸ்பேன் அணி வெற்றி!

பிக் பேஷ் ரி – 20 தொடரின் 25ஆவது லீக் போட்டியில், பிரிஸ்பேன் ஹீட் அணி, டக்வத் லுயிஸ் முறைப்படி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சிட்னிமைதானத்தில்நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், பிரிஸ்பேன் ஹீட் அணியும், சிட்னி தண்டர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாகவே மழைக் குறுக்கிட்டதால், போட்டி 8 ஓவர்களாக குறைக்கப்பட்டு போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கமைய இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பிரிஸ்பேன் ஹீட் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பிரிஸ்பேன் ஹீட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்சஓட்டங்களாக, டொம் பென்டோன் 56 ஓட்டங்களையும், கிறிஸ் லின் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், டேனியல் சேம்ஸ் 2 விக்கெட்டுகளையும், கிறிஸ் ட்ரீமெய்ன் மற்றும் பிரெண்டன் டாக்ஜெட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 120 என்ற வெற்றி இலக்கை




நோக்கி சிட்னி தண்டர் அணி, துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது, 5ஆவது ஓவர் நிறைவுற்ற நிலையில் மழைக் குறுக்கிட்டது. தொடர்ந்து மழைக் குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டது.

இதற்கமைய பிரிஸ்பேன் ஹீட் அணி, டக்வத் லுயிஸ் முறைப்படி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன்போது, அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக அலெக்ஸ் ஹேல்ஸ் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும், உஸ்மான் கவாஜா 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பிரிஸ்பேன் ஹீட் அணியின் பந்துவீச்சில், ஜெக் பிரெஸ்ட்விட்ஜ் 2 விக்கெட்டுகளையும், சஹீர் கான் மற்றும் பென் லாப்லின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 19 பந்துகளில் 7 சிக்ஸர்கள் 2 பவுண்ரிகள் அடங்களாக 56 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டொம் பென்டோன் தெரிவு செய்யப்பட்டார். டொம் பென்டோன் இப்போட்டியில் ஒரு ஓவரில் ஐந்து சிக்ஸர்கள் விளாசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் காட்டுத் தீ!



கொழும்பு, ஜன. 08

பதுளை பெரகல – கீழ் விகாரகல பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக பத்து ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹப்புத்தளை பொலிஸாரும் அல்துமுல்லை பிரதேச மக்களும் ஒன்றிணைந்து பெரும் சிரமத்துக்கு மத்தியில் காட்டுத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பாக ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



# கல்வித்துறையில் மாற்றம் அவசியம்!




கொழும்பு, ஜன. 08

ஒரு வலுவான அரசு நிறுவப்பட்ட பின்னர் நாட்டின் கல்வித்துறை வேகமாக மாற்றப்படுமெனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி – சந்தனா பெண்கள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

10 தேசியப் பாடசாலைகளை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அதேபோன்று நாட்டுக்குத் தேவையான மும்மொழிகளைக் கற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலைகளை அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

சிறந்ததொரு கல்வியை மாணவர்களுக்குப் பெற்றுக்கொள்ளும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

மானுட சமூகம் நாகரீகமான முறையில் வாழ வேண்டுமாயின் உயரிய மனிதப் பண்புகள் மிகவும் அத்தியாவசியமாகும். இன்று பாடசாலைகளில் பிள்ளைகள் அறிவை மாத்திரமே பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால் உயரிய மனிதப் பண்புகள் குறித்து போதிக்கப்படுவதில்லை என்பது எனது எண்ணம். ஒரு நாளுக்கான பாடசாலை நேரத்தில் 40 நிமிடங்கள் மட்டுமே மதம் சம்பந்தமான கல்வி மாணவர்களுக்கு போதிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக குறுகிய எண்ணத்தையுடைய சமூகத்தை நாம் உருவாக்குகின்றோம். இதனை மாற்றவேண்டிய காலம் வந்துள்ளதாக நான் நம்புகின்றேன்.

இதேவேளை தற்போது நாட்டில் காணப்படுகின்ற நாடாளுமன்றம் குறைந்த ஆசனங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

அதிகளவு உறுப்பினர்கள் இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனூடாகவே நாம் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.நாங்கள் வலுவான அரசாக இருந்து பணியாற்றுவதற்கு எந்நேரமும் தயாராக இருக்கின்றோம் – என்றார். (ஐ)

## பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிச்சடங்கு ஏற்பாடுகளைப் பொறுப்பேற்றுள்ள சுரேஷ், ஹரீன்!

கொழும்பு, ஜன. 08

பசறைப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளை ஐ.தே.கவின் எம்.பிக்கள் வடிவேல் சுரேஷ், ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் ஏற்றுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இ.போ.ச. பஸ் ஒன்று 100 அடி பள்ளத்துக்குள் விழுந்ததில் 12 பேர் உயிரிழந்தனர். 50 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

இந்த கோர விபத்தினால் மடுல்சீம, பசறை பிரதேசங்கள் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளன.

விபத்து நடந்த இடத்திற்கு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சென்று பார்வையிட்டார்.

விபத்தில் உயிரிழந்த அனைவரினதும் இறுதிச் சடங்குகளுக்கான அனைத்து செலவினையும் நானும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரீன் பெர்னான்டோவும் பொறுப்பேற்றுள்ளோம். எம் சொந்தங்கள் இன்று எவராலும் ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கு முகம் கொடுத்துள்ளனர்.

உயிரிழந்த அனைத்துச் சொந்தங்களின் இறுதி கிரியைகள் உட்பட அவர்களின் தேவைகளுக்கான அனைத்துச் செலவுகளையும் நானும் ஹரீனும் பொறுப்பேற்று விரைவாக செயற்படுத்துவது தொடர்பில் எமது மக்கள் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)




# தரம் 6 மாணவர்களின் வரவேற்பு வவுனியாவில்







வவுனியா, ஜன. 08

வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் பாடசாலை பசுமையாக்கல் திட்டமும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.

தேசிய ரீதியில் தரம் 6 மாணவர்களை பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் 6 மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து அயல் பாடசாலைகளில் கல்வி கற்ற 62 மாணவர்கள் அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் தரம் 6 கல்வி நடவடிக்கைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களுக்குச் சின்னம் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

அத்துடன், பாடசாலைச் சூழலை கற்றல் நடவடிக்கைக்கு ஏற்ற பகுதியாக மாற்றியமைக்கும் பொருட்டு பாடசாலை பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் 62 மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. புதிய மாணவர்களும், பெற்றோரும் இணைந்து அவற்றை நாட்டினர். (ஐ – 100)

# கச்சதீவு திருவிழாவில் 9,000 பேர் பங்கேற்பர்!

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 08

கச்சதீவு திருவிழாவில் இம்முறை இலங்கை மற்றும் இந்தியர்கள் 9 ஆயிரம் பேர் பங்குகொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கச்சதீவு திருவிழா ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கச்சதீவு ஆலயத்தின் வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த திருவிழாவுக்குக் கடற்படையினரின் உதவி மிக முக்கியமான ஒன்றாகும். ஆழ்கடல் போக்குவரத்துக்கு அவர்களின் உதவி இன்றியமையாததாகும்.

இதன்படி திருவிழாவுக்கு முதல்நாளான 6ஆம் திகதி அதிகாலை 5 மணியில் இருந்து மதியம் 11 மணிவரை யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் வரை பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று காலை 6 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரைக்கும் குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவு நோக்கிய படகு சேவையும் நடைபெறும்.

கடந்த முறை திருவிழாவுக்கு இந்தியாலில் இருந்து மட்டும் 3 ஆயிரம் பேரும் இலங்கையில் இருந்து 6 ஆயிரம் பேரும் கலந்துகொண்டனர். இதேபோன்று இம்முறையும் 9 ஆயிரம் பேர் வருகை தருவார்கள் – என்றார். (ஐ)

# பசறை பஸ் விபத்து; விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 08

பதுளை – பசறை, மடுல்சீமை பிரதான வீதியின் 6 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் 4 பெண்கள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்துள்ளனர். பஸ்ஸின் சாரதியும் நடத்துநர் உள்ளிட்ட காயமடைந்த 40 இற்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பலர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையுடன், சிலர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பதுளை பொது வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகளுக்காக, அவர்களின் குடும்பங்களுக்கு தலா 50,000 ரூபா இழப்பீடு வழங்குவதற்கு போக்குவரத்துச் சேவை முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையினூடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இதற்காக விசேட குழுவொன்றை உடனடியாக நியமிக்குமாறு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, பசறை – மடூல்சீமை வீதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபை தெரி வித்துள்ளது.

விசேட பொறியியலாளர்கள் குழுவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் சந்திரசிறி குறிப்பிட்டார். (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம், இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆற்றிய அவரது கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எனது இந்த அறிக்கையானது கடந்த ஜனவரி மூன்றாம் திகதி அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பானதாகும். இக்கொள்கை பிரகடனமானது கடந்த மூன்று தசாப்தங்களாக ஆட்சி புரிந்த அரசாங்கங்களின் பொதுவான திசையிலிருந்து விலகிச் செல்லுகின்ற அறிகுறிகளைக் கொண்டிருப்பதினால் இது மிக அவதானமாக விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஜனாதிபதி கடந்த நவம்பர் 16, 2019 அன்று மிக முக்கியமான வெற்றியை பெற்றுக் கொண்டார். இந்தப் பாரிய வெற்றியில் காணப்படும் பிரச்சினைக்குரிய விடயம் யாதெனில் பெரும்பான்மையான சிங்கள,பௌத்த மக்களை தவிர ஏனைய மக்கள் ஜனாதிபதி அவர்களில் நம்பிக்கை வைப்பதற்கு தயாராக இல்லை என்பதாகும். இதை எவ்விதத்திலும் ஜனாதிபதி மீது அவதூறு கொண்டு வரும் நோக்கில் நான் கூறவில்லை. மாறாக, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒன்றிணைந்த நாடாக நாம் இருக்கவேண்டுமென்பதில் கரிசனையாக இருந்தால், இத்தகைய ஒரு முக்கியமான அம்சத்தினை நாம் புறக்கணிக்க முடியாது என்பதனை சுட்டிக்காட்டவே இந்தக் கருத்தினை முன்வைக்கின்றேன்.

ஒரு நாட்டின் செல்வாக்கு மிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்விலே அவரது சொந்த மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கிறார்களா என்பது முக்கியமானது அல்ல. மாறாக, ஏனைய மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கத் தயாராக உள்ளார்களா என்பதே முக்கியமாகும். துரதிஷ்டவசமாக இது இன்னும் நடைபெறாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஜனாதிபதி தனது வெற்றிக்கு பின் வெளியிட்ட இரண்டு கருத்துக்களில் இந்த விடயம் தொடர்பில் தாம் தெளிவான விளக்கத்தோடேயே உள்ளார் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்.

ருவன்வெலிசாயவில் இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் கூறியிருந்த அதேவேளை மிகத்தெளிவாக தான் முழு நாட்டிற்கும் ஜனாதிபதி என்றும், தனக்கு வாக்களிக்காதவர்களுக்கும் தானே ஜனாதிபதி என்பதனையும் சேர்த்தே கூறியிருந்தார்.

எமது நாடானது பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள், சமயங்கள், இனங்கள் என்பவற்றை பிரதிபலிக்கும் பன்முகத்தன்மை கொண்ட மக்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஏற்றுக் கொண்டு, ஜனாதிபதி இந்த இடைவெளியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பார் என்பது எமது எதிர்பார்ப்பாகும். இந்த ஒவ்வொரு மக்களின் சமத்துவம் என்பது அவர்களின் எண்ணிக்கையின் பலத்திலே தங்கியிருக்கவில்லை. ஜனநாயகமானது தப்பிப்பிழைக்கவும், செழிப்படையவும் வேண்டுமேயன்றி வெளிப்படையான பேரினவாதத்தை நோக்கி செல்லாமல் இருக்க வேண்டுமென்றால், இந்த கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் கவலைக்கிடமாக ஜனவரி மூன்றாம் திகதி 2020, நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அத்தகைய பின்னடைவான ஒரு நிலைப்பாட்டினை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். பிரச்சினை உருவாவதற்கு வழி சமைத்து, அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து, மூன்று தசாப்தங்களாக பல தீமைகளை கொண்டு வருவதற்கு காரணமாக இருந்த எமது நாட்டின் தலைவர்களின் பின்னடைவான சிந்தனைக்கு ஒத்த சிந்தனையாக அது அமைந்திருந்தது.

எமது கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி அல்லது பெடரல் கட்சி என அறியப்பட்ட கட்சி குடியுரிமை சட்டத்தின் விளைவாக பிறந்த ஒரு கட்சியாகும். இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் ஆனது முதலாவது பாராளுமன்றத்தில் 7 அங்கத்தவர்களை கொண்டிருந்த கிட்டத்தட்ட 8 லட்சம் மக்களின் வாக்குரிமையை ரத்து செய்தது. பெரும்பான்மையினரின் விருப்பம் என்ற பெயரிலேயே ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையை இது பறித்தது. மேலும் அவர்களுடைய குடியுரிமையையும் அதை இல்லாமல் செய்தது. சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் பேரினவாத செயற்பாடு காரணமாகவே இலங்கை தமிழரசுக் கட்சி எனும் இன அடிப்படையிலான ஒரு கட்சி உருவாவதற்கான தேவை உண்டாகியது என்பதனை இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1956 ஆம் ஆண்டு அரச மொழிகள் சட்டமானது சிங்கள மொழியினை மாத்திரம் அரச கருமமொழியாக ஏற்றுக் கொண்டதை அடுத்து இந்த பேரினவாதம் மேலும் புலப்படும் வகையில் உருப்பெற்றதை நாம் கண்டோம். நமது தலைவர்கள் அமைதியான முறையிலே காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பொழுது தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது. அது பின்னர் தொடர்ச்சியான அவ்வப்போது படுகொலைகளாக மாறியது.

முதலாவது குடியரசு யாப்பு வரையப்பட்ட பொழுது மொழிகள் தொடர்பில் இருந்த அநீதியை திருத்துவதற்கு எமது கட்சி முயற்சி செய்தது J.A.L. குரே அவர்கள் இலங்கையின் அரசமைப்பு மற்றும் நிர்வாக சட்டங்கள் என்னும் தனது ஆய்வுக் கட்டுரையின் 81ஆவது பக்கத்திலே பின்வருமாறு குறிப்பிடுகிறார். அரசமைப்பு சபையானது 1971ம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி மொழி தொடர்பிலான சட்டத்தினை 88 வாக்குகளினால் நிறைவேற்றியது (10 அங்கத்தவர்கள் வாக்களிக்கவில்லை), அச்சட்டமானது பின்வருமாறு அமைந்திருந்தது, அனைத்து சட்டங்களும் சிங்கள மொழியில் இயற்றப்பட்ட வேண்டும், அவ்வாறு இயற்றப் படுகின்ற ஒவ்வொரு சட்டத்திற்கும் தமிழாக்கம் இருத்தல் வேண்டும்.

பெடரல் கட்சி பின்வரும் திருத்தங்களை முன்மொழிந்திருந்தது:–

சிங்களமும் தமிழும் –

a). சட்டங்கள் இயற்றப்படும் மொழிகளாக இருத்தல் வேண்டும்

b). அரச கரும மொழிகளாக இருத்தல் வேண்டும்

c). நீதிமன்றங்களின் மொழிகளாக இருத்தல் வேண்டும்

d). அனைத்து சட்டங்களும் வெளியிடப்படும் மொழிகளாக இருத்தல் வேண்டும்

– இந்த முன்மொழிவுகள் அனைத்தும் 88 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டன. இவற்றிக்கு ஆதரவாக 13 வாக்குகள் கிடைத்தன. இந்த திருத்தங்களின் விவாதங்களின் பின்னர் பெடரல் கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் சபையில் உரையாற்றியிருந்தார்.

அந்த உரையில், முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்பிலே தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை திருப்திகரமாக அமையவில்லை என்பதினாலே இந்த சபையின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவது நன்மையளிக்காத விடயமாகும் என்றும், அன்றைய தினம் சபையின் நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுகின்ற வேளைக்கு பின்னர் தாம் சபைக்கு சமுகமளிக்க போவதில்லை என்றும் தெரிவித்தார்.

எமது கட்சியின் முயற்சிகள் வீண்போன அதேநேரம், பேரினவாத அரசமைப்பு சட்டம் 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டபோதும் நடைபெற்றது. இதன் பிற்பாடே ஆயுதம் ஏந்தாத தமிழ் மக்கள் பெருவாரியாக கொலைசெய்யப்பட்ட 1983ஆம் ஆண்டு கருப்பு ஜூலைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இதன்போது இந்தியா தனது நன்னோக்கான ஈடுபாடு காரணமாக இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதற்கமைய இங்கு சம்பந்தப்பட்டு தமிழர்களிற்கு வரலாற்று ரீதியாக நடந்த அநீதிகளை சரி செய்யமுன்வந்தது.

1987ஆம் ஆண்டு நாட்டிலுள்ள மக்களின் பன்முகத் தன்மையினை ஏற்றுக்கொண்டு அரசமைப்பைச் சீர்திருத்துகின்ற சரியான திசையில் நாடு பயணிக்க ஆரம்பித்தது. எண்ணிக்கையில் குறைவாக உள்ள மக்களும் தமது பிராந்தியங்களில் நிர்வாகத்தினை மேற்கொள்ளக் கூடிய அதிகாரங்களை கொண்ட மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. சிங்கள மொழியோடு கூட தமிழும் அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நடவடிக்கைகள் நாங்கள் விலக்கிவைக்கப்பட்டிருந்த தேசிய நீரோட்டத்தில் மீண்டும் இணைய வழிவகுத்தது. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன.

ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் கொண்டு வரப்பட்ட ஓகஸ்ட் 2000 அரசியல் யாப்பு பத்திரம் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சர்வ கட்சி அங்கத்தவர் குழுவின் நடவடிக்கைகள் போன்றன இவற்றுள் உள்ளடங்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான இறுதிப் போரின்போது, யுத்தம் முடிவடைந்ததும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திற்கு தமிழ்மக்களின் தேசிய பிரச்சினை அரசியல் ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாக தீர்க்கப் படும் என்ற உறுதியை ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கம் வழங்கியிருந்தது. இந்த உறுதி மொழி குறைந்தது மூன்று தடவை இந்தியாவிற்கு வழங்கப்பட்டது, அதிலே 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை அடையும் நோக்கில் 13 ஆவது திருத்தச்சட்டம் மேலும் கட்டியெழுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. 13 ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் என்பது தேசிய மொழியான தமிழ் மொழியின் முழுமையான அமுலாக்கத்தினையும் உள்ளடக்குகின்றது.

2015 ஆம் ஆண்டு சிறிசேன – விக்கிரமசிங்க அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 2016 ஆம் ஆண்டு மார்ச் நாடாளுமன்றத்தை அரசியல் சாசன சபையாக மாற்றும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உள்ளடங்கலான அனைத்து கட்சிகளின் பங்குபற்றுதலோடு வழிகாட்டல் குழு மற்றும் ஏனைய உப குழுக்கள் இது தொடர்பில் அநேக காரியங்களை முன்னெடுத்து வந்துள்ளன. இந்த நாட்டின் நன்மையைக் குறிக்கோளாக கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கில் இந்த நடவடிக்கைகளில் நாம் பூரணமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தோம். எமது மக்கள் அனைத்து மக்களினதும் பன்முகத்தன்மையினையையும் சமத்துவத்தினையும் அங்கீகரிக்கும் ஒன்றிணைந்த, பிரிபடாத, பிரிக்கமுடியாத நாட்டிற்குள் தீர்வொன்றினை எட்ட இன்னமும் தயாராக இருக்கிறார்கள். அதனடிப்படையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படவேண்டும் என்கின்ற ஜனாதிபதியின் கருத்தோடு நாம் உடன்படுகின்றோம்.

சுதந்திரமடைந்ததன் பிற்பாடு எமது சமூகத்தின் பன்முகத்தைமையினை அர்த்த முள்ள வகையில் அங்கீகரிக்க முடியாமல் இருந்த பின்னணியினை கடந்த 30 வருடங்களில் நாம் எடுத்து வரும் பல்வேறு சாதகமான நடவடிக்கைகளால் மாற்ற முயன்று வருகின்றோம். நாம் இன்னும் பயணிக்க வேண்டியிருக்கின்றது. இந்த நாடு செழிப்படைய வேண்டும் என்றால் நாம் அதே நோக்கில் பயணிக்க வேண்டும். மாறாக அந்த பாதையில் இருந்து விலகும் எத்தகைய நடவடிக்கையும் எம் அனைவரையும் பாரிய அழிவிற்கே இட்டுச் செல்லும்.

இந்த அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படும் அநேகர் சிங்கப்பூரானது எவ்வாறு தம் மக்கள் மத்தியில் தேசிய நல்லிணக்கத்தினையும் செழிப்பினையும் அடைந்துள்ளது என கூறுவதனை அவதானித்துள்ளேன். நாம் விரும்புவதை மாத்திரம் பொறுக்கிக்கொள்ளாமல் இருப்போமேயாகில் சிங்கப்பூர் ஒரு நல்ல உதாரணம். சிங்கப்பூர் நான்கு தேசிய மொழிகளை கொண்ட நாடு, அவர்களின் தேசிய கீதமானது மொத்த சனத்தொகையில் 15 வீதத்தை மாத்திரம் கொண்ட மலே மக்களின் மொழியில் இசைக்கப்படுகிறது. நவீன சிங்கப்பூரின் தந்தை என அழைக்கப்படும் லீ குவான் யூவின் அறிவுரைக்கு செவிமடுப்பது சாலத் தகுந்தது எனக் கருதுகிறேன்.

*“பிரித்தானியாவின் மாதிரி பொதுநலவாய நாடு சிலோன் ஆகும். சுதந்திரத்தினை நோக்கி மிக அவதானமாக தயார்படுத்தப் பட்ட ஒரு நாடாகும். யுத்தத்தின் பின்னர் 10 மில்லியனிற்கும் சற்று குறைவான மக்களை கொண்ட ஒரு நடுத்தரளவிலான நாடு. 1948 இல் சிலோன் சுதந்திரம் பெற்ற போது சுதந்திரத்தின் பரிணாம வளர்ச்சிக்கு மிக துல்லியமான ஒரு மாதிரியாக அது விளங்கியது. ஆனால் அது அவ்வாறு செயற்படவில்லை ஒரு வளமிக்க நாடு வீணாய் போய்க் கொண்டிருப்பதனை எனது விஜயங்களின் போது நான் கண்டேன். ‘ஒரு மனிதன் – ஒரு வாக்கு’ என்ற அடிப்படையினால் ஓர் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை; தீர்க்க முடியாது. 8 மில்லியன் சிங்கள மக்கள் 2 மில்லியன் தமிழ் மக்களை தேசிய மொழியான ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாறும்படிக்கு வாக்குகளினாலே தோற்கடித்தார்கள். இது தமிழ் மக்களிற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. எந்தவொரு அரச மதமும் இல்லாமல் இருந்த ஒரு நாட்டிலே சிங்களவர்கள் பௌத்த மதத்தினை தேசிய மதமாக மாற்றினார்கள். இதனால் தமிழர்களும் இந்துக்களும் நிராகரிக்கப்பட்டதனை உணர்ந்தார்கள்.”* – என்று குறிப்பிட்டார் லீ குவான்யூ.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கத்தின் படி அவர் தவறான திசையில் – பெரும்பான்மை வாதப் பாதையில் – செல்கின்றார் என்பது தெரிகின்றது. அது இந்த நாட்டுக்குப் பெரும் பாதிப்பைத் தரும்.

எம்மைப் பொறுத்தவரை பிளவுபடாத, பிரிக்க முடியாத, ஐக்கிய நாட்டுக்குள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு நாங்கள் இன்னும் சித்தமாயுள்ளோம் – அதுவும் சமனான பிரஜைகளுக்கான உரிமைகளோடு, சமமான மத, மொழி, கலாசார உரிமைகளோடு, ஒரு தரப்பாரை விட இன்னொரு தரப்பார் உயர்ந்த நபர்கள் அல்லர் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சேர்ந்து வாழ நாம் தயாராக இருக்கின்றோம்.

சகல பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமை என்பது அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் இந்த அரசுக்கு இந்த நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக மாறி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் தெரியும். அந்த முயற்சிகள் இன்னும் உயிரோட்டமாக உள்ளன. அவை முடிந்து விடவில்லை.

இந்தச் சபை ஏகமனதாகக் கூடித்தான் அத்தகைய அரசமைப்பை உருவாக்குவதற்கும் தீர்மானித்தது. அதில் நீங்கள் அனைவருமே பங்கு பற்றியிருந்தீர்கள்.

இங்கு பேசிய ஜனாதிபதி புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப் பட வேண்டும் என்று கூறியிருந்தார். அந்த அரச மைப்பில் இடம் பெற வேண்டிய மூன்று விடயங்களை அவர் குறிப்பிட்டிருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, தேர்தல் முறைமை, மாகாண சபைகள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த மூன்று விடயங்கள் தான் இந்த நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற் றப்பட்ட போதும் அதனால் அடையாளம் காணப்பட்டன. அது தொடர்பில் உங்கள் ஒவ் வொரு வரினதும் பங்களிப்புடனும் அனேக விடயங்கள் இங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகையினால், அந்த முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து அதனைப் பூர்த்தி செய்யும்படி ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுகின்றேன்.

‘எனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் நானே ஜனாதிபதி’ என்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ கூறியிருக்கின்றமையால், அதனடிப்படையில் இந்த நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரதும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் அவர்கள் அனைவருக்கும் திருப்தி தரும் வகையில் இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து பூர்த்தி செய்யுமாறு நான் விநயமாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் –என்றார். (உ)

# தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ்மொழியிலும் தேசிய கீதம்

## அங்கஜன் எம்.பி. அமைச்சரிடம் நேரில் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 08

சுதந்திர தின தேசிய நிகழ்வில் தமிழ்மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனிடம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் ஜனக பண்டார தென்க்கோனை நேரில் சந்தித்து அவரிடம் எழுத்துமூல கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய அரசு பதவியேற்ற பின்னர் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி இடம்பெறும் 72ஆவது சுதந்திர தினத்தின் தேசிய நிகழ்வில் சிங்களமொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்ட வந்தநிலையில் சுதந்திர தின தேசிய நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்க்கோனிடம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளு மன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டுள்ளார்.

இந்த நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1949ஆம் ஆண்டு முதலாவது சுதந்திர தினத்தில் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

சுதந்திர தினத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்று முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல அரசால் உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனினும் 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிங்களமொழியில் மட்டும் தேசியகீதம் இசைக்கப்பட்டது. எனினும் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை சுதந்திர தினத்தின் தேசிய நிகழ்வில் சிங்கள மொழியிலும் தமிழ்மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

எனவே தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப் படுவது அரசலமைப்புக்கு முரணானதாகவோ பொது பாரம்பரியத்துக்கு மாறானதாகவோ அமைய மாட்டாது. தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப் படுவது அடையாளம் என்பதுடன் வெவ்வேறு இனங்களை ஒன்றிணைக்கின்றதாக அமையும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவராக கரு ஜயசூரிய?



கொழும்பு, ஜன. 08

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக உருவாக்கப்படும் எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவராகச் சபாநாயகர் கரு ஜயசூரியாவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, கரு ஜயசூரிய ஆகியோர் இணைந்து பணியாற்றவேண்டும் என்றும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஐ.தே.வின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவும், எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவராக சபாநாயகர் கரு ஜயசூரியாவும் செயற்படவேண்டுமெனத் தீர்மானித்துள்ளனர்.

அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற மூன்று தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்றும், ஐ.தே.கவின் பௌத்த தளத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தேர்தல் பிரசாரத்தை வழிநடத்த வேண்டியது தவிர்க்க முடியாதது என்றும் கட்சியின் வட்டாரங்கள் கூறுகின்றன.

தேர்தலுக்கு முன்னதாக பரந்த கூட்டணியை உருவாக்கவேண்டும் என்றும் அதில் ஜே.வி.பி சேர்க்கப்பட வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டது.

எதிர்க்கட்சியின் பல்வேறு கட்சிகளும், ஐக்கிய தேசிய முன்னணியின் அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்க்கட்சியின் பொதுவான கூட்டணியை உருவாக்க முன்மொழிந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மாணவிகள் துஷ்பிரயோகம்; அம்பாறை வைத்தியர் கைது

அம்பாறை, ஜன. 08

பாடசாலை மாணவிகள் நான்கு பேரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் அம்பாறை, உகன சேனரத்னபுர கிராமிய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்பதற்கு வைத்தியப் பரிசோதனை அவசியம் எனத் தெரிவித்து அந்த மாணவிகள் வைத்தியசாலைக்கு வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்திய பரிசோதனைகளின் பின்னர் தாம் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உள்ளாக்கப்பட்டனர் என மாணவிகள், பொலிஸாருக்கு வழங்கியுள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

14,17 மற்றும் 18 வயதுடைய மாணவிகளே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வைத்திய பரிசோதனைகளுக்காக மாணவிகள், அம்பாறை பெரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வைத்தியர், அம்பாறை மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# மன்னாரில் தொடர்ச்சியாக சட்டவிரோத மண் அகழ்வு

## அதிகாரிகள் மீது மக்கள் விசனம்

மன்னார், ஜன. 08

மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றபோதும் உரிய அதிகாரிகள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் உள்ள அருவியாறு, கூராய், பாலியாறு போன்ற பகுதிகளிலும் அளவு கணக்கில்லாதவாறு டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்களில் மண் ஏற்றப்படுவதுடன் நானாட்டான் அருவியாற்றங்கரையில் மீன் வளர்ப்புக்கு அனுமதி எடுத்து மணல் வியாபாரங்கள் நடைபெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் பைக்கோ இயந்திரங்கள் மூலம் நீர் ஊற்று வெளிவரும் வரையில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனைக் கண்டுகொள்ளாத நிலையில் பொலிஸார் உள்ளனர் என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மக்கள் மேலும் தெரிவிக்கையில் –

கனரக வாகனங்களின் அளவுக்கு அதிகமான போக்குவரத்துகளால் வீதிகள் சேதமடைந்து போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஓடைகளைக் குடைந்து அகழிகளாகத் தோண்டிச் செல்வதால் சாதாரண வெள்ளம் வந்தாலும் குடிமனைகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடந்த வருடம் மன்னார் மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் வந்து பார்வையிட்டு மண் அகழ்வுக்குத் தடை செய்யப்பட்ட பகுதி எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் மீண்டும் அவ்விடத்தில் மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது.

இதனை அதிகாரிகளும் பொலிஸாரும் கேட்பதில்லை. பொதுமக்கள் யாரேனும் இது பற்றி கதைக்க ஆரம்பித்தால் அவர்களுக்கான சமுர்த்தி உதவி நிறுத்தப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கிறார்கள்.

தனி மனிதர்களின் இலாபம் கருதி எமது இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதை இலங்கை கனிய வளம், சுற்றாடல் அதிகார சபை, பொலிஸார் மற்றும் அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. எனவே இந்த விடயத்தில் யார் நடவடிக்கை எடுப்பது? – என்றனர். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.11, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2020 இல் வெளியிடப்பெற்றது.